மு. கருணாநிதி

முரசு 1 | சென்னை | 18—2—55 | வெள்ளி | ஒலி 47

இலக்கியத்தில் நாம்

தும்மல் வந்தபோது உள்ளத்தால் நெருங்கியவர் யாரோ நினைப்பதாக ஒரு பழக்கம் நம்மிடையே நிலவுகிறதல்லவா? அதைப்போலவே இன்னொரு பழக்கமொன்றும் நெடுங்காலமாக நம் நாட்டில் உலவுகிறது.

வீட்டுக் கூரையிலே காகம் கரைந்தால் புது விருந்து வருவதாக வேளாளன் நினைத்து களிப்பிலாழ்கிறான்; போர் முனை சென்றிருக்கும் காதலன் திரும்பி வந்துவிடுவானென்று காதலி பூரிப்பு பெறுகிறாள்; மகன் வந்துவிடுவானென்று மாதா புத்திர சோகத்துக்கு விடை அளிக்கிறாள்! ஒரு காக்கையின் ஒலி வீணை எழுப்பும் ஒலியைவிட அவர்களுக்கு இன்பம் தரவல்லதாயிருக்கிறது! இந்த நம்பிக்கையை வைத்து புலவர் நச்செள்ளையார் ஒரு அழகான ஓவியத்துக்கு வர்ணம் தீட்டுகிறார்.

கொம்பும் கொடியும்போல வாழ்க்கையிலே பின்னிக்கிடக்கும் காதலர் இருவர் பிரிய நேரிடுகிறது. பொருள் திரட்டவோ—அல்லது மாமன், மாமியாரின் அருள்பெற்று காதலிப்பவளை மணமுடிக்க, புலி நகம் கொண்டுவரவோ—தலைவன் வேற்றூர் ஏகுகிறான். அவன் திரும்பிவர பல நாட்கள் பிடிக்கின்றன. அதுவரை அந்தப் பூங்கொடியை வாடவிடாமல் தடுத்துநின்ற சக்திதான் எது என்று அவனுக்கு ஒரே வியப்பாய் இருக்கிறது! "என் உயிர் போன்றவளின் உயிர்த் தோழியே! நீதான் அவளைப் பிரிவுத் துயரத்திலிருந்து சாகாமல் காப்பாற்றியிருக்கிறாய்"—என்று பல சொல்லி, தோழிக்கு நன்றி சொல்லப் போகிறான்.

அவளோ, அந்த நன்றியை ஏற்க மறுக்கிறாள். "நன்றிக்குரியவள் நானல்ல; அதோ அந்தக் காக்கைகள்தான்! ஒவ்வொரு நாளும் வீட்டின் உச்சியிலே அந்தக் காகம் கரையும்போது உன் வருகையை அறிவிப்பதற்குத்தான் அது அப்படிச் செய்கிறது என்று அவள் நம்பினாள்; உள்ளம் விம்மினாள். அந்த நம்பிக்கையே அவளது துயர் துடைக்க பயன்பட்டது." என்று அவள் விளம்புகிறாள்.

அதுமட்டுமா? "உன் காதலிக்கு உயிர்தந்து உயர்வு பெற்ற அந்தக் காக்கைகளுக்கு உணவாக, தொண்டி என்னும் ஊரிலே விளைந்த செந்நெல் மணிகளின் சோற்றை, மணம் பரப்பும் பசுநெய்யோடு கலந்து, ஏழுகலத்திலிட்டு, நீ வாரி வழங்கினாலும், அது கூட அவைகளுக்கு சிறிய கைமாறாகத்தான் இருக்கமுடியும்; விருந்து வருமென்று பாசாங்குக் குரல் கொடுத்து, அவளை மகிழ்வித்த அந்தக் காகங்களுக்கு அதுகூட செய்யும் சிறிய உதவியாகத்தான் இருக்கும்"—என்றும் செப்புகிறாள்.

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)



Best copy available

மாலை நேரம்!

: எஸ். எஸ். தென்னரசு :

அந்தி நேரம். ஆற்றோரத்து தாழைக் கூட்டத்தினிடையே அமர்ந்து 'அந்தவாழ்வு' குறித்து எண்ணிக் கொண்டிருந்தேன். 'அந்தவாழ்வு' என்று நான் குறிப்பிடுவது சுயமரியாதைக் கட்சிக்காரர்கள் சொல்லியும் எழுதியும் வருகிறார்களே, 'திராவிடர்கள் அப்படி இருந்தார்கள், இப்படி இருந்தார்கள்' என்று. அவர்கள் கூறும் அந்த வாழ்வை நான் குறிப்பிட வில்லை. எனக்கு எந்த அரசியல் கட்சி மீதும் பற்று, பாசம் இல்லை. எந்தக் கட்சியையும் நான் பகைத்துக் கொள்வதுமில்லை. ஆனால் ஒவ்வொரு கட்சியைப் பற்றியும் நன்கறிவேன். இல்லாள் மீரா, பத்து மணிக்கு இட்டலி கட்டித் தருவாள். அடுத்த பதினைந்தாவது நிமிடத்தில் நான் என் அலுவலகத்தில் இருப்பேன். எந்த அலுவலகம் என்று கேட்டு விடாதீர்கள். நீங்கள் கேட்டாலும் அதை வெளிப்படையாகச் சொல்லி உண்டியளிப்போருக்கு ஒரு நாளும் துரோகம் நினைத்திட மாட்டேன்.

அன்று எங்களூரில் 'கஜேந்திர மோட்சம்' —ஆம், முதலைப் பிடியில் ஒரு முரட்டு யானை சிக்கித் தவித்த கதையைத் தான் சொல்லுகிறேன். அந்த விழா பார்க்க ஆற்றங்கரைக்குச் செல்லுகிறவர்களெல்லாமே பக்தர்கள் என்று சொல்லவில்லை. இன்னும் சொன்னால் அங்கே வருகின்ற பக்தர்களில் பெரும்பாலோர் அந்த 'மோட்சம்' முடிகின்ற வரை கூட இருப்பதில்லை. வில் வண்டி பூட்டி வீட்டிலே எல்லோரையும் அழைத்துக் கொண்டுதான் வருவார்கள்; ஆனால் விழா பார்ப்பதில்லை — விடியும்வரை இருப்பதில்லை. இதையேன் நான் உங்களுக்கு விளக்கிக் கொண்டிருக்க வேண்டும்? சீர் திருத்தம் தேவை என்று சொல்லி விட்டால் மறுநாளைக்கே அவன் 'நாஸ்தீகர்' பட்டியலிலே சேர்க்கப்பட்டு, அதற்குப் பரிசை அன்றைய தினமே அலுவலகத்தில் மேலாளர்களிடம் பெற்று விடும் போது, எனக்கு ஏன் இந்தப் பொல்லாப்பு?

ஒரு காலத்திலே எங்களூரில் எங்கள் குடும்பத்திற்கு இருந்த செல்வாக்கு கொஞ்சமல்ல. என் தந்தையின் சொல்லதிகாரம் நீட்டிய இடத்திலே பாயும் கூர் வேலாக இருந்தது. வீட்டிலே விருந்தில்லாத நாள் மிகச் சொற்பம். அப்பேர்ப்பட்ட செல்வக் குடும்பம் சீர்குலைந்து போய்விட்டதே, தித்திக்கும் திராட்சைக் கொத்து அறுந்து விழுந்து சிதறி ஓடிப்போய்விட்டதேஎன்று எண்ணியபடிதான் அன்று நான் ஆற்றங்கரையிலே அமர்ந்திருந்தேன். அந்த வாழ்வு என்று நான் சொன்னதும் எங்களுடைய அழிந்த வாழ்வைத் தான்—வாழ்ந்து கெட்ட வரலாற்றைத்தான்!

இருள் சூழப்போகும் நேரம், எங்கிருந்தோ ஒரு தெளிந்த குரல் தென்றலை வாகனமாக்கிக் கொண்டு என் அருகே வந்து ஒலித்தது.

"ஆங்கிலத்திலே புரட்சி என்பதற்கு மாற்றம் என்பது பொருள். அதற்காக அன்றாட வாழ்க்கையிலே நிகழும் மாற்றங்களை 'புரட்சி' என்றும் சொல்லிவிட முடியாது. நாற்று நேற் கதிராவது புரட்சியல்ல! மழலைக் குழந்தை மரக்குதிரை கேட்டு வளர்வதும் புரட்சியாகாது! என்னைக் கேட்டால் அடிப்படையான மாற்றங்கள் ஏற்படுவதைத்தான் நான் புரட்சி என்பேன்"

இந்தக் குரல் கொடுப்போர் யார்? எங்கிருந்து இப்படி அடிக்கிக்கொண்டே போகிறார்? என்று எனக்கு விளங்கவில்லை, அவரின் இந்தப் புரட்சி விளக்கம் எனக்கு புதுமையாகப் படாவிட்டாலும், இந்த நாட்டவருக்கு இதுபோன்ற ஆணித் தரமான பேச்சுக்கள் அவசியம்

மா நதி ஓரம்!

என்பதை மட்டும் நான் உணர்கிறேன். பண்டைக் காலத்திலே நடந்த திருமணமுறை இடைக் காலத்திலே மாற்றப்பட்டு, மீண்டும் பண்டைக் காலத்து முறையைக் கையாண்டாலே அதைப் புரட்சித் திருமணம் என்று விளம்பரப்படுத்தும் இந்த துர்பாக்கிய நாட்டிற்கு இத்தகைய சொற்பொழிவு மிக மிகத் தேவைதானே! இழந்த முறையை இன்று கைப்பற்றியிருப்பது எப்படிப் புரட்சியாகும் என்று இந்த வாலிபர்கள் கூட எண்ணிப் பார்ப்பதில்லை. புரட்சியால் சரிந்த சாம்ராஜ்யங்களின் வரலாற்றை படித்த மாணவர்கள்கூட புரட்சிக்கும், மாற்றத்துக்குமுள்ள வேறுபாட்டை நாட்டோருக்கு எடுத்துரைப்பதில்லை.

மந்திரிசபை மாற்றமும், மங்கா ஒளிபரப்பும் தங்க ஆசனத்தில் வீற்றிருக்கும் பிரதமர்களின் மாற்றமும் புரட்சியாகி விடாது. அதனால் அந்த நாட்டு மக்களுக்கு புது வாழ்வு கிடைத்துவிடாது,

"வெளிநாடுகளிலெல்லாம் இந்தச் சிறு மாற்றத்தை கலகமென்றே அழைக்கிறார்கள்"—குரல் மீண்டும் என் காதில் மோதியது.

இந்தக் கருத்தை என்னால் ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. காலையிலே செய்த ஆர்ப்பாட்டத்தின் விளைவாக மன்னன் மருண்டு, மாலையிலே மந்திரி சபையை மாற்றினான் பல்கேரியாவில்! அதனால் மக்கள் சுபிட்சமா அடைந்தார்கள். ஆள் மாற்றம் புரட்சியாகி விடுமா? இதோ மறுபடியும் குரல் ஒலிக்கிறது பாருங்கள்; "பிரஞ்சுப் புரட்சி அந்நியரை விரட்டிட நடத்தப்பட்ட புரட்சியல்ல, அரசியலிலே ஒரு சிறு மாற்றத்தை ஏற்படுத்தி புது ஒழுங்கை நிர்மாணிக்க நடத்தப்பட்ட புரட்சிதான் பிரஞ்சுப் புரட்சி. ரஷ்ய நாட்டிலே கொழுந்துவிட்டெரிந்த புரட்சியும் அப்பேர்ப்பட்டதுதான் — அந்நியரை விரட்டிட வீறுகொண்டெழுந்த புரட்சியாகிவிடாது. ஆனால் 1916-ல் அயர்லாந்தில் நடந்த புரட்சி இருக்கிறதே, அது தான் அந்நியருக்கு எதிராக நடத்தப்பட்டப் புரட்சியாகும். நமது புரட்சியை அந்தப்புரட்சியோடுஒப்பிடுவது தவறாகாது என்றுதான் நினைக்கிறேன். காரணம், நம்மை ஆளுகிறவர்களை நாம் அந்நியர்கள் என்றுதான்கருதுகிறோம்; நீ வேறு, நான் வேறு என்றுதான் இடித்துக் காட்டிவருகிறோம்" இந்தக் குரலுடையோரை- காங்கிரஸ்காரர் என்று என்னால் நம்புவதற்கில்லை. ஏனென்றால் வெள்ளைக்காரர்களைத்தானே காங்கிரசார் அந்நியர் என்று சொல்லிவந்தார்கள்; ஆனால் அந்த வெள்ளைக்காரன் போனபின்பும் அந்நியர் என்று ஒரு காங்கிரஸ்காரர் பேசமாட்டார் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

அப்படியானால் யார் அந்தப் பேச்சாளர்? எனக்கு கடைசிவரை புரியவில்லை. ஆனால் யாராக இருக்கும் என்று சிந்திக்கவும் அந்தக் குரல் விட்டு வைக்கவில்லை—மீண்டும் ஒலிக்கத் தொடங்கியது "பொதுமக்களின் ஆதரவைப் பெறாமலும், நேரிடையான வழிகளைப் பின்பற்றாமலும் நடத்தப் பட்ட புரட்சிகள் வெற்றி பெற்றதாக வரலாறு நமக்கு சான்று தரவில்லை" உண்மைதானே இது! பொதுமக்களின் ஆதரவில்லாமல் பிரஞ்சு நாட்டிலே புரட்சி வெற்றி பெற்றிருக்குமா? எத்தனை கமால்கள் தோன்றியிருந்தாலும் துருக்கியிலேதான் மறுமலர்ச்சி காணமுடியுமா? பொதுமக்களின் ஆதரவு பெற்ற புரட்சி எத்தனைமுறை தோல்வியடைந்தாலும் அதிகாரத்துணை கொண்ட ஆளவந்தார்கள் இறுதிக் காலத்திலே மண் மூடித்தான் போயிருக்கிறார்கள். ஆனால் ஒரு புரட்சி இயக்கம் தன் பலத்திலே நம்பிக்கையற்றிருந்தால் அந்த இயக்கம ஒருநாளும் வெற்றிக் கலசத்தைத் தொடவே முடியாதுதான். இந்த நேரத்தில் "தன்னைத்தானே தோல்வியடைந்ததாக கருதும் படை நிச்சயமாக தோல்வியுறும் படைதான்" என்று ஒருவெளிநாட்டுத் தளபதி சொன்னதை என்னால் நினைவுபடுத்திப் பார்க்காமல் இருக்க முடியவில்லை,

1912ல் நடைபெற்ற பால்கன் யுத்தத்தில் தோல்வி கண்ட துருக்கி, பின்பு அதே படையைக் கொண்டு வெற்று பெற்றது எப்படி? இழந்த கான்ஸ்டாண்டி நோபில் எவ்வாறு காப்பாற்றப் படடது?

1916ல் ஏற்பட்ட அயர்லாந்துப் புரட்சிமுதலில் ஒரு வாரத்தில் எப்படிஅடக்கப்பட்டது? பின்பு தோல்விகண்ட

○ தொடர்ச்சி 8-ம் பக்கம்

வேடம் நிலைக்காது!

"வெறும் ராணுவ அம்சங்களைமட்டும் நீங்கள் முக்கியமாக நம்பினாலும் நீங்கள் வெற்றி காணலாம். ஆனால் அதனால் நீங்கள் மிகவும் மதிப்புவாய்ந்த அம்சத்தை இழந்துவிடுகிறீர்கள். மக்கள் ஆதரவை இழக்கிறீர்கள்"

இந்த வாசகத்தை, அனைத்தும் துறந்த முனிவர் ஒருவர் ஆஸ்ரமத்திலே இருந்து கொண்டு சொல்லியது என்றுதான் யாரும் எண்ணுவர்.

லண்டன் சீமையிலே நமது பண்டிதர் சொல்லியவைதான் இவை என்று அறிந்தால் நம்மைப்போன்றவர்கள் ஆச்சரியப்படலாம். அதில் அர்த்தமுண்டு. தேசியத் தோழர்கள் திடுக்கிட மாட்டார்கள். ஏன்? விந்தை தரும் நிகழ்ச்சிகள் எல்லாம் அவர்களுக்கு வெள்ளையர் காலத்தோடு அழிந்தொழிந்து போயின. பண்டிதரின் லண்டன் நகர் சொற்பொழிவு, நினைவிலே கொஞ்சு மொழி கோதையரையும், நாட்டோரின் அன்பைப் பெற ஆஸ்ரமத்திலே 'அகத் தூய்மை' பற்றிய சொற்பொழிவையும் நடத்தும் போலிச் சாமியார்களைத்தான் நம் நினைவுக்கு இழுத்துவருகிறது.

ராணுவ தர்பார் நடத்துவோர் மக்கள் சக்தியை இழந்துவிடுவார்கள் என்கிறார். உண்மை! இந்த நல்லுபதேசத்தை கடல் கடந்து போய் சொல்லுவானேன். தான் கொலுவீற்றிருக்கும் இந்திய துணைக்கண்டத்தில் ஏன் இந்த போதனை இல்லை? தென்னாட்டாரின் போராட்டங்களின்போது இந்தக் கருத்து எங்கே போயிருந்தது? தூத்துக்குடியிலே தோழர்கள் துப்பாக்கிக் குண்டுக்கு பலியானபோது பேசாத பேச்சை, கல்லக்குடி துப்பாக்கிப் பிரயோகத்தின்போது பேசாத பேச்சை துரைமார்களின் மத்தியிலே மட்டும் பேசுவானேன்? 'நேரு சமாதானப் பிரியர்' என்ற பட்டம் நிலைத்து நிற்கவா? வேடம் நெடுநாளைக்கு நிலைக்க வழிசெய்யாதுஎன்று அந்த 'சமாதானப் பிரியரு'க்கு நினைவுறுத்துகிறோம்.

தலையங்கம்

சென்னை　　18—2—55　　வெள்ளி

பொதுக்குழு கூடுகிறது!

“நீதிக்கட்சியிலிருந்து புடம்போட்டு எடுக்கப்பட்டவர்கள்தான், திராவிடர் இயக்கத்தவர்கள்;

“நீதிக் கட்சியை ஏழையின் கட்சியாக ஆக்கியிருக்கிறோம்—அவ்வளவுதான்;

“பின்பு திராவிடர் கழகத்திலிருந்தும் நாங்கள் பிரிந்தவர்கள்; புடம் போட்டு எடுக்கப்பட்டவர்கள்;

“யார் எங்களுக்கு வழிகாட்டியோ, யார் எங்களுக்கு அரசியல் தந்தையோ அவரைவிட்டே இன்று வெளியேறி தனியாக இயங்கி வருபவர்கள் நாங்கள்;

“திராவிடர் கழகத்தைவிட்டு தோளில் இருந்த துண்டுடன் வெளியேறிவந்த நாங்கள், இன்று, கழகத்திற்கென சொந்தத்திலே கட்டிடமும், பத்திரிகைகள் கொண்டவர்களாகவும், பிச்சைக்காரர்களாகிய நாங்கள் தஞ்சைப் புயல் நிவாரண நிதிக்கு ரூ. 25,000 தந்தவர்களாகவும் இருக்கிறோம்; இப்படி, இவ்வளவு குறுகிய காலத்தில், தி. மு. கழகம் தமிழ் நாட்டில் வளர்ந்திருப்பதற்குக் காரணம், நாட்டின் பல்வேறு பிரச்சினைகளுக்கு நாங்கள் காட்டும் காரணங்கள் சரியானவை என்ற உண்மையை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள்”

—என்பதாக நம்முடைய நிலைகுறித்து பெங்களூர் மாநாட்டிலே அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். தென்னகத்தின் வரலாற்றிலே மகத்தான இடம் பெற்றுவிட்ட அத்தகையை இயக்கத்தின் பொதுக்குழுதான் வருகிற **20-ம் தேதியன்று** கோவையை அடுத்த பேரூரில் கூடப்போகிறது; பெருமைதரும் திட்டங்களை உருவாக்கப் போகிறது!

பொதுக்குழுதான் ஜனநாயக ரீதியிலே இயங்கிவரும் ஒரு இயக்கத்திற்கு **இருதயம்** போல;-அந்த இருதயத்தின் மேல் கை வைத்து, துடிப்புகளின் வேகம் உணர்ந்து; சூடான தீர்மானங்களை; நாடுவாழ, நாம்வாழ—தீது புரிவோரின் சூது வெளிப்பட; சாதுவேஷம் போட்டு கோலமண்டபம் ஏறியோர்கூட குள்ளநரிகளின் பாதையிலே நடக்கலாம் என்ற நிலைமையை வெளிப்படுத்த—பொதுச்செயலாளர் அவர்கள் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் தீர்மானங்களைத் தரப்போகிறார்.

இந்தப் பொதுக்குழுவிலே ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் விஷயங்கள் அரசினரின் நாடகத்தடை சட்டமும், நம்முடைய இரண்டாவது மாநில மாநாடு பற்றியுமாகும்.

நாடகமும், சினிமாவும் நம்முடைய கொள்கை வித்துகளை தூக்கிச் சென்று பரப்பும் தென்றலாக மாறியதும்—செங்கோல் பிடிப்பவர்கள்கூட இப்போது சீறிவிழ ஆரம்பித்திருக்கிறார்கள். இயக்கத்தின் சேடயத்தை ஆளவந்தோர் வளைத்துவிட வேண்டுமென்று மனப்பால் குடிக்கும் இந்த நெருக்கடி மிகுந்த நேரத்திலேதான் ‘பேரூர்’ நடைபெற இருக்கிறது.

மறுமலர்ச்சி நாடகங்களை வெட்டிச் சாய்ப்பதற்கு சட்டம் தயாராகிவிட்டது. வழக்கு மன்றத்து கூண்டிலேறிய பின்புதான் புதுமைக் கருத்துக்களை நாம் நாட்டினருக்குச் சொல்ல முடியும்—என்கிற நிலை பிறந்து விட்டது. இந்தச் சட்டத்தினால் கொள்கை வளர்ச்சிக்கு கொடுமை புரியும் சூழ்நிலைகள் அரசாங்கத்தாரால் உருவாக்கப்படுமேயானால், அவ்வப்போது அதைக் கண்டித்திடும் கணைகளை அடுக்கிவைக்கும் பேழையாக, பேரூர் அமையும் என்பதை நாம் நிச்சயம் எதிர்பார்க்கலாம்!

“வாரீர், வாரீர்” என்று காளையரை அழைத்து, பின்னர் அவர்களை சருக்கு நிலத்திலே இறக்கி விட்டு, திரும்பிப்பாராது ஓடிவந்துவிடும் இயக்கமல்ல தி. மு. கழகம். “யார் இவர்கள்?—ராயபுரத்துச் சிறுவர்கள்தானே? வாலிபக் கூட்டம்தானே” என்று வக்கணை பேசியோரெல்லாம் இயேசு கிறிஸ்து சாகும் போதுகூட அவருக்கு வயது இருபத்தோன்பதுதான்—அவரும் மீசை முளைத்த வாலிபர்தான் என்கிற உண்மை உணர்ந்து—அல்ல; அல்ல; அந்த உண்மையை நாட்டு மக்கள் உணர்ந்து விட்டதை எண்ணி—இப்போது வெட்கப்படுகிறார்கள்!

வாலிபர்களின் கட்சி என்கிறீர்களே; இதோ பாருங்கள்—வாலிபர்கள் சாதித்ததை வயது முதிர்ந்தவர்களும் சாதித்தது கிடையாது என்பதற்கு வரலாறு காட்டும் ஆதாரங்கள்—என்று ‘இளைஞர் பட்டியலை’ தூக்கி நீட்டினோம்:

மாசிடோனியாவிலே பிறந்து, இந்த மண்டல முழுவதையும் கட்டியாளவேண்டுமென்று படை நடத்திவந்த வீரன் அலெக்சாண்டரின் வயது இருபத்தோன்றுதான்—அந்த வயதிலேதான் அவன் நாடுபல வென்று திக்விஜயம் நடத்தினான்.

வானொலியைக் கண்டு, நவீன வாழ்க்கையிலே புதுமை சேர்த்த போது மார்க்கோனியின் வயது இருபத்து ஏழுதான்!

சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரதமராக இருந்து, நெப்போலியனை எதிர்த்து போர் நடத்தியபோது இளையபிட்டிற்கு வயது இருபத்து நான்குதான்!

சந்திரகுப்தன் நவநந்தர்களை சவக்குழியிலாழ்த்தி, மௌரிய சாம்ராஜ்யத்துக்கு அஸ்திவார மிட்ட போது அவனுக்கும் வயது இருபத்தைந்துதான்!

வாலிபர்களின் வெற்றிக்கு இன்னும் எவ்வளவு உதாரணங்கள் வேண்டும்? — என்ற கேள்விக்கு அவர்களிடமிருந்து பதிலையே காணோம்!

“பெயர் மாற்றுவதற்கு ஒரு போராட்டமா? அது எனக்குப் பிடிக்கவில்லை”—என்று பொல்லாங்கு பேசுவோர், “உங்களுடைய சேட்டுக்கடை மறியலுக்குப் பிறகுதானே, இங்கு வந்து விளையாடும் வடநாட்டு வேட்டுவரின் பெயர் ஒழிப்புப் போரும் நடைபெறுகிறது”—என்று சீறிவரும் பதில் கேட்டு வேசாரிப் போனார்கள். இந்த விளக்கத்தினாலெல்லாம் அவர்கள் மனம் திருந்திவிடுவார்களென்று நாம் நினைக்கவில்லை. வீம்புக்கு மருத்துவம் செய்யமுடியாத நிலையை நாமும் உணர்ந்திருக்கிறோம். விழலுக்கு நீர் பாய்ச்சுவானேன் என்ற பெருநோக்குடனேதான் இத்தனை நாட்களும் நம்முடைய இலட்சியபுரிப் பயணம் நடைபெற்றிருக்கிறது. இனியும் இப்படித்தான் நாம் செல்ல வேண்டியிருக்கிறது.

பகைப் புலத்தை அழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கும் தளபதியைவிட சொந்தப் படையை—படைக்கலனை அவ்வப்போது செப்பனிட்டுக்கொள்ளும் தளபதிக்குத்தான் அதிகப் பெருமை உண்டு. அந்தப் பணியும் பேரூரில் நடைபெற இருக்கிறது.

இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு மீண்டும் நாம் மாநில மாநாட்டை சிறப்புற நடத்தப் போகிறோம். ஒன்பது மாகாணங்களிலிருந்து பிரதிநிதிகளை வரவழைத்திருந்தார்கள்; அகில இந்தியாவும் பங்குபெறும் மாநாடு என்று பெருமை பேசிக் கொண்டார்கள்; பகைமை கொள்வதாக பாவனை செய்துவந்த பாகிஸ்தானத்திலிருந்தும் பார்வையாளர் வந்திருந்தார்; பர்மாவிலிருந்து பௌத்தச் சாமியார்கள் வந்திருந்தனர். இத்தனை ஆடம்பரங்களோடும்—கொட்டு முழக்கோடும்—நான்கு லட்சம் வெள்ளிக் காசுகளின் ஜீரணத்திற்குப் பிறகும், ஆவடியிலே தேசியத் தோழர்களால் திரட்ட முடிந்த கூட்டம் நான்கு லட்சம்தான்!

நாமும்தான் இரு ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையிலே மாநில மாநாடு கூட்டினோம் — தமிழகத்திலுள்ள ஜில்லாக்களிலிருந்துதான் அதிகமான பார்வையாளர்கள் வந்திருந்தனர். கூட்டம் எவ்வளவு தெரியுமா? இரண்டு லட்சத்திற்கும் மேலாக!

ஒன்பது ராஜ்யங்களிலிருந்து அவர்களுக்குக் கூடிய தொகை நான்கு லட்சம்பேர், தேசியப் பத்திரிகைகளின் கணக்குப்படி!

மாவட்டங்களிலிருந்து நமக்குக் கூடிய மக்கள் திரள் இரண்டு லட்சத்துக்கும் மேல்!

பூரிப்பான செய்திதான், நமக்கு! சென்ற மாநில மாநாட்டைப் போல சீரோடும், சிறப்போடும் வருகிற மாநாடும் அமையத்தக்க வழிகளை ‘பேரூர்’ அமைத்துக் கொடுக்குமென்று நம்புகிறோம்.

கொங்குச் சீமையிலே-பீரிவினை வேகத்தால் பொங்கி எழும் காளையர் கூடுகின்றனர்! பேரூரிலே கூடும் பொதுக்குழு நமக்கு புதுப் புதுத் திட்டங்களைச் சமைத்துக் கொடுக்கட்டும்!

★　★　★

உலகப்பன் போன மாதம் ஒரே வியப்பில் ஆழ்ந்துவிட்டான். வரப்போகிற உலகப் போர்-மனித சமுதாயம் பங்கெடுத்துக் கொள்ளும் கடைசிப் போராக இருக்கும் என்ற எண்ணம்கூட எனக்கு அவ்வளவு அதிர்ச்சியைத் தரவில்லை. என்ன அப்படி ஆச்சர்யப் படத்தக்க நிகழ்ச்சி என்று கேட்கிறீர்களா? இதோ சொல்லிவிடுகிறேன்.

சென்ற மாதத்து அரசியல் செய்திகளைக் கவனித்தீர்களா? எங்கும் ஒரே 'டவுனாச்சசன்'. மலையுச்சியிலே மந்தமாருதத்தை சுவைத்தபடி உலவியவர்களெல்லாம் 'தொப்'பென்று மடுவிலே விழுந்துவிட்டார்கள்.

மெண்டஸ் பிரான்சைப் பற்றிக் கேள்விப்பிட்டிருப்பீர்களே! அவர்தான் பிரஞ்சு நாட்டுப் பிரதமர். ஏகாதிபத்திய விஷம்கொண்ட பாம்புக் குட்டிகள் உலவும் பிரெஞ்சு பூமியிலே, காலத்தின் வேகம் உணர்ந்த கண்ணியவான், அவர்! முதலைகளும், மூர்க்கர்களும் டியூப்ளே காலத்து வரலாற்று ஏடுகளைப் புரட்டிக்கொண்டிருந்த போது, அவைகளைப் பிடுங்கித் தீயிலே போட்டு, "காரை-புதுவைப் பகுதிகளிலே நாம் சுரண்டியது போதும்; சொந்த நாட்டுக்கு ஓடிவிடுவோம்" — என்று சூசகமாக உரைத்தவர், அவர். மெண்டசுக்கு மட்டும் இந்தக் கருணை உள்ளமும், வருமுன் உணரும் பண்பும் இல்லாவிடில், இவ்வளவு விரைவில் காரை-புதுவை மக்கள் விடுதலை அடைந்திருக்க முடியுமா? முடியவே முடியாது! காமன்வெல்த் அமைப்பிற்குள்ளே குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருக்கும் நேரு இந்தப் பிரதேசத்தைப்பற்றி கொஞ்சம்கூடகவலைப் பட்டிருக்கவே மாட்டார்! இன்னும் கொஞ்ச நாட்களில் மொராக்கோ போன்ற பிரெஞ்சுக் காலனிகளுக்குக்கூட அவர் விடுதலை வழங்கும் யோசனையில் இருந்தார். அது பிடிக்கவில்லை. இந்த பிரெஞ்சுப் பிரபுக்களுக்கு! அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து அவரைக் கவிழ்த்துவிட்டார்கள்.

பாவம்; அவர் எத்தனை யெத்தனை புதுத் திட்டங்களை நிறைவேற்ற இருந்தார் தெரியுமா? பிரான்சு நாடு மது தயாரிப்புக்கும் மது செலவழிப்புக்கும் பெயர் பெற்ற நாடு. பெண்கள், குழந்தைகள், வயதான கிழவர்கள் — இவர்கள் எல்லோருமே பாரபட்சமின்றி குடிப்பார்கள். குழாய்த் தண்ணீரை குழந்தைக்குக் கொடுத்தால் அதிலுள்ள கிருமிகள் தாக்கி வியாதி வந்துவிடுமென்று தாய்மார்கள் அனைவரும் சீல் உடைக்காத ஒயினைத்தான் பருகுவதற்குத் தருவார்கள். அத்தகைய பாவபூமியில்தான பூரண மது விலக்கையல்ல—மது செலாவணியின் குறைவை அமுலுக்குக் கொண்டுவர இருந்தார். அதற்கும் எவ்வளவு எதிர்ப்பு தெரியுமா? மெண்டசைக் கூட பிரெஞ்சு நாட்டு திரு. வி. க என்று அழைக்கலாம்போல் தோன்றுகிறது. அவர் மதுவை அடிக்கடி உபயோகிக்க மாட்டாராம். மதுவகைகள் சர்வ சாதாரணமாக வழங்கும் தேநீர் விருந்துகளின் போதுகூட அவர் பாலைத்தான் குடிப்பாராம். பாவம்: அந்த உத்தமர் தலைக் குப்புறக் கவிழ்ந்து விட்டார்!

★



"அந்த உத்தமர் மட்டுமா? உதவாக்கரையாகிய நான்கூட அல்லவா கவிழ்ந்திருக்கிறேன்"— என்று புழுங்கும் மனசாட்சியுடன் என் கண்முன்னே தோன்றினார், பட்டம் தாணுப்பிள்ளை. இந்தியாவிலேயே முதன் முதலாகத் தோன்றிய பிரஜா — சோஷலிஸ்டுகளின் அரசாங்கம்! சென்ற வாரம் அதற்கு நேர்ந்த கதியைப் பார்த்தீர்களா? திரு-கொச்சி தமிழ்ப் பிரதேசத்திலே கருவிலுள்ள குழந்தைகள்கூட ஒரு முறை சிரித்தனவாம் - பட்டம் தாணுப்பிள்ளை ஒழிந்ததைப்பற்றி அங்கெல்லாம் அவ்வளவு மகிழ்ச்சி!

எங்கே; என்னுடைய பழைய டயரிகளைக் கொஞ்சம் புரட்டுகிறேன். தமிழர்களின் போராட்டத்தின்போது ஆண்களையும், பெண்களையும் ஒரே லாக்கப்பில் அடைத்தாராம். குருவிகளைச் சுட்டுத் தள்ளுவதைப்போல மரத்திலே உட்கார்ந்திருந்த மனிதனையெல்லாம் இந்தக் கொடுங்கோலர் சுட்டுக்கொன்ருராம். அந்த வெறியரின் விழ்ச்சி என் மக்களுக்கு உவகை தராதா என்ன?

மானைத் துரத்தி ஓடும் வேடனைத் தடுத்து நிறுத்திவிட்டு அவனது காலை வாரிவிட்டு - புள்ளிமானைப் பின்பற்றி வேங்கையொன்று ஓடியதாம்! அதைப் போலத்தான் இருக்கிறது; பட்டம் தாணுப்பிள்ளையை வீட்டுக்கு அனுப்பிவிட்டு இப்போது காங்கிரசைச் சேர்ந்த பனம்பள்ளி பட்டத்துக்கு வந்திருக்கும் நிகழ்ச்சியும்! இட்லர் அரசாண்டால் என்ன? அவன் அண்ணன் முசோலினி அரசாண்டால் என்ன? எல்லோரும் ஒரே ஆணவ மரத்தின் கிளைகள்தானே! பிரஜா கட்சிக்குப் பதில் காங்கிரஸ்கட்சி அரசு கட்டிலேறுவதால் திரு-கொச்சி பகுதியிலே கொழுந்து விட்டெரியும் தீ அணைந்துவிடுமா?

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். 'அவன் தம்பி அங்குதன்' என்கிற கதையாக...ஏன்; பட்டத்தின் ஆட்சியை பழிக்கிற வகையில் கூட இந்த பகல் வேஷக்காரர்களின் தர்பார் அமையலாம். எது எப்படியிருந்தாலும் உதிரிகளைத் துணைக்கழைத்து திரு — கொச்சியிலே உருப்பெற்றிருக்கும் காங்கிரஸ் ராஜாங்கம் நிச்சயம்நிலைபெற்றிருக்கப்போவதில்லை. பனம்பள்ளி பட்டத்தைக் கவிழ்த்தார்-பின்னர் இருவரும் சேர்ந்து நாளை கவிழத்தான் போகிருர்கள்.

மலையாளத்தின் அந்தப்பகுதி உலகத்திலேயே படித்தவர்கள் அதிகம் உள்ள பிரதேசங்களில் ஒன்று. இந்தப் 'போலி'களின் பாச்சா அங்கா பலிக்கப் போகிறது?

★

"எப்படிப் பலிக்கும்? ஸ்டாலினுல் ஞானஸ்நானம் செய்விக்கப் பட்ட என் பாச்சாவே இந்த ரஷ்யபூமியில் பலிக்க வில்லையே'!- என்று, இமைகள் வீங்கும் அளவிற்கு கண்ணீர் வடித்துநிற்கும் மெலங்கோவ் என் மனக்கண் முன்னே தோன்றினுர். அவர் பதவியை ராஜிநமாசெய்தது உங்களுக்கெல்லாம் நினைவிருக்கிறதா?

ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் அளவுக்கு அவர் தகுதிபெற வில்லையாம். எனவேதான் விலகி விட்டாராம். கடந்த இருபத்திரண்டு மாதங்களாகத் தகுதி பெற்றிருந்தவர் இப்போதுஅந்தத் தகுதி திறமைகளை எப்படி இழந்தாரோ? அந்த ரகசியம் எனக்கு மட்டும் விளங்கவேயில்லை.

ஏன் மறைப்பானேன்! அந்த ரகசியத்தையும் இப்போதே சொல்லி விடுகிறேனே.

சோவியத் நாட்டிலே குருசேப் என்று ஒரு பிரமுகர் இருக்கிருர். கைலாயத்திலே பரமசிவனுக்கு எவ்வளவு செல்வாக்கோ, அவ்வளவு செல்வாக்கும் குருசேவுக்கு மாஸ்கோவில் உண்டு, அவர்தான் அகில ரஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர். அவருடைய பாக்கெட்டுக்களில்தான் மாலெங்கோவும், புதிய பிரதமர் புல்கானினும் வாழ்கிருர்கள். கம்யூனிஸ்ட் அகிலத்தில் அவர் இட்டதே சட்டம்;



கொண்டதே கோலம். அவரை விரோதித்துக் கொண்டால், அவ்வளவுதான், கொஞ்சம் 'ஸ்லேட்டாக' நெற்றிக் கண்ணைக்காட்டி எதிர்த்தவர்களை பஸ்பமாக்கி விடுகிவார்; சொத்துக்களை பிடுங்கிக் கொள்வார்; பின்னர் ராஜத்துரோகி, முதலாளிகளின் உளவாளி என்று குற்றம் சாட்டப் பட்டு தூக்கிலே தொங்கவைத்து விடுவார்!

போலீஸ் மந்திரி பேரியாவின் கதை தெரியுமல்லவா, உங்களுக்கு? இந்த சர்வேஸ்வரனுல் தான் அந்தப் பிரமுகர் சமாதியானுர்!

ஆனுல் மாலெங்கோவ் புத்திசாலி. பேரியாவைப் போல மாலெங்கோவும் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று மாஸ்கோ ரேடியோ ஒலிபரப்பாமல், மாலெங்கோ விலகி விட்டார் என்று ஒலிபரப்பியதே, அந்த அளவுக்கு அவருடைய அரசியல் ஜாதகம் பலம் வாய்ந்ததுதான்!

ஆனுல்; எந்த நேரத்தில் என்ன நடக்குமென்று யாரால் சொல்ல முடியும்? மாலெங்கோவ் ஆசனமாகப் போட்டு உட்கார்ந்திருக்கிருரே அந்த குருசேவ் எனும் குண்டு எப்போது வெடிக்கப் போகிறதோ?

★

"வெடித்தே விட்டது. குண்டு அல்ல; என் குட்டு!" — ஆமாம் சென்ற கிழமை டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்தான் இப்படிப் புலம்பினுர். டாட்டாவுக்கு உதவிபுரிய தவியாய்த் தவித்தாராம்; நேருவின் சோஷலிசப் போக்கு கூடாது என்று தலைகீழாக நின்ருராம்; 'முதலாளிகள் வாழ்க' என்று கோஷமிட்டபடி அவர் பாராளுமன்றத்தை வலம் வந்தாராம். — இப்படியெல்லாம் அவர்மீது குற்றச்சாட்டுகள் வாரியிறைக்கப் படுகின்றன. எனவேதான் அவரும் ராஜிநாமா செய்யப் போகிருராம்!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

துண்டு வீச்சு

[விமானி]

தேவாசுரப்போர்தொடங்கி விட்டது; தேவர்களும், அசுரர்களும் பிரம்ம தேவனிடம் ஓடினார்கள். "இந்தப் போரிலே வெற்றி யாருக்கு என்று சொல்லுங்கள் பிரபு" என்று இருசாராருமே வேண்டிக் கேட்டுக் கொணடார்கள், அதற்கு பிரம்மதேவன், "நீங்கள்சென்று ரஜிமகாராசனிடம் கேளுங்கள், அவர் யார் பக்கம் சார்ந்து நிற்கிறரோ அந்தப்பக்கமேவெற்றி பெறும்" என்றார். அதன்படி தேவர்களுக்கு வெற்றி தேடிக் கொடுத்தால் தன்னை இந்திரனாக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் தேவர்கள் சார்பில் ரஜிமகாராசன் போர் செய்து அவர்களுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தான். இந்திரன்கூட ரஜிமகாராசனின் பாதம்பணிய வேண்டியதாயிற்று. ஆனாலும் பகைவனுலும் இச்சகம் பேசி காலில் வீழ்ந்து வேண்டிக் கொண்டாடானுனல் அதனை மறுத்தல் கூடாத காரியம் என்றுகூறி இந்திரனுக்கு அந்தப் பதவியை விட்டுக் கொடுத்துச் சென்றான் உதவிபுரிந்த ரஜி மகாராசன். அப்போதெல்லாம் நாரத முனிவர் எங்கேயோ ஒரு மூலையில் 'ஜெய ஜெய, புவனபதே' போட்டுக் கொண்டே இந்திரனுக்கு ஆறுதல் சொல்லி வந்தார். ரஜிமகாராசன்இறந்து அவன் மக்கள் பட்டத்திற்கு வந்தபின் "பார்த்தீர்களா ராஜகுமாரர்களே உன் தந்தை வென்ற நாட்டை ஆளுகிறான், நீங்கள் அதை பார்த்துக் கொண்டிருக்கலாமா" என்று தூண்டிவிட்டார்.—இப்படி ஒரு கதை நாரதர் கலகத்தின் எண்ணிக்கையில் இடம் பெற்றிருக்கிறது. அந்த நாரதருடைய 'இரட்டை நாக்கும்' கவர்னர் பிரகாசாவின் அரசியல் விநயமும் சேர்ந்து நம் நினைவுக்கு ஓடி வருகின்றன, அங்கே நாரதர் இந்திரனுக்கும் ஆறுதல் சொன்னார், ரஜிமகாராசன் குமாரர்களையும் ஏவி விட்டார்.

இங்கே பிரகாசா தமிழ் மொழியின் பெருமையையும் பேசியிருக்கிறார் அதே நேரத்தில் எப்படி தமிழகத்தை வஞ்சகமாக அடிமைப்படுத்தலாம் என்றும் பேசியிருக்கிறார். புகழ் மாலை சூட்டி புலவர்களுக்கும் நல்லவராகி, தன்னை 'கிளைவின்வாரிசாக' அனுப்பி உதவிய வடக்கத்தி ஏகாதிபத்தியத்திற்கும் சாதகமாகப் பேசி தன்னுடைய 'நாரதர் வேலையை'— அரசியல் சாதுர்யத்தை நிலை நாட்டிக் கொண்டிருக்கிறார்.

இந்த வாரம் சென்னையில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டைத் திறந்து வைத்த சென்னை கவர்னர் பிரகாசா தன் சொற்பொழிவு மூலம் இரட்டைப் படகிலே கால் வைத்திருக்கிறார், "மொழி வளர அரசாங்க உதவியைநம்பியிருப்பது வீணே. அரசாங்க முயற்சியால் எம்மொழியும் வளர்ந்ததில்லை. எழுத்தாளர்களும் கவிஞர்களுமே மொழியை வளர்க்க முடியும்" என்று கவர்னர் பேசியிருக்கிறார். கவர்னரின் இந்தப்பேச்சு இரண்டு உட்கருத்துக்களை தாங்கியிருக்கிறது என்பது நன்கு விளங்குகிறது. சர்க்கார் மொழிவழி மாநிலம் பிரிப்பார்கள், அதன்மூலம் மொழி வளரும் என்று எதிர்பார்க்காதீர்கள், அதுபகல் கனவுதான். நீங்கள்தான் மொழியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற பொருளில் கவர்னர் பேசியிருக்கலாம்; ஆனல், எதிரிலே அமர்ந்திருந்த தமிழர்கள் நிச்சயமாக அந்தப் பொருளை எடுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். கவர்னர் நமக்கு சார்பாகப் பேசுகிறார் என்று உள்ளூர மகிழ்ந்திருப்பார்கள். ஆனால் பிரகாசாவின் அடுத்த கணை ஒரு வேலை புரிந்திருக்கலாம்; புரிந்திருக்கக்கூடும். ஒவ்வொருவரும் மூன்று 'மொழிகளை கற்றுக் கொள்ளுவது என்பது கடினமல்ல அதுஅவசியமெனக் கருதுகிறேன். அப்படிக் கற்பதின் மூலம்தான் நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்ட முடியும். மொழிவழி மாநிலம் பிரிப்பது சாத்தியமான காரியமல்ல' என்று பிரகாசா அடுத்துக்கூறியிருக்கிறார். மொழிகற்றால் அது இலக்கிய வளர்ச்சிக்கு துணை புரியும் என்பது அனைவரும் அறிந்தது தான். ஆனல் கவர்னர் ஏன் 'மூன்று' மொழிகள் என்று கணக்கிட்டுச் சொல்ல வேண்டும்? "பல மொழிகளை" கற்றுக் கொள்ளுங்கள்' என்று பொதுப்படையாகச் சொல்லியிருக்கலாம் அல்லவா!

ஆனல் அவர் சொன்ன மூன்று மொழிகள் என்ன? அங்கேதான் தமிழுக்கு விலங்கு பூட்டுகிறார் ராஜபவனத்துச் சீமான். "இந்தியை அரசாங்கப் பொது மொழியாக்கினால் தென்னாட்டு மக்கள் தமிழையும் கற்றுக் கொள்ள வேண்டும்; அரசாங்கப் பொதுமொழியாகிய இந்தியையும் கற்றுக் கொள்ள வேண்டும்; உலகியல் அறிய ஆங்கிலத்தையும் கற்றுக் கொள்ள வேண்டுமே! ஆக நாங்கள் மூன்று மொழிகளை அல்லவா கற்று ஆக வேண்டும்; வடநாட்டுக்காரர்களுக்கு இந்தி தாய் மொழியாகி விட்டது. ஆங்கிலம் மட்டும் கற்றால் போதுமே" என்று தென்னாட்டு அறிவியக்கங்கள் சர்க்காருக்கு வலியுறுத்தி வந்தன. அதனுடைய எதிரொலியாகத்தான் கவர்னர் சொல்லுகிறார், மூன்று மொழிகளைக் கற்றுக் கொள்ளுவது கடினமல்ல என்று. இது புரிந்திருக்குமா 'புலவர்' பெருமக்களுக்கு! ஆனல் எப்படியோ பிரகாசா நாரதர் வேடத்தை திறம்பட நடித்துவிட்டார்! டில்லியின் அன்பு முத்திரையும் பெற்றார். 'தமிழ் தலைவர்'களின் 'சபாஷ்'பட்டத்தையும் பெற்று விட்டார், இந்திரனைத் தட்டிக் கொடுத்துவிட்டு ரஜிமகாராசனின் மக்களையும் தூண்டிவிட்டவரைப்போல!

★

"ஐயோ, தமிழ் நாட்டிலே மட்டும் லட்சத்து அறுபதாயிரம் குருடர்களாமே! சென்னை நகரில் மொத்தம் 20746 பேர் குடியிருக்க வசதியற்றவர்கள் வாழ்கிறார்களாமே, தெய்வங்களே! உங்களுக்குக் கண்ணில்லையா? ஆயிரம் கண்ணுடையாளே, ஒரு கண்ணைத் திறந்து பார்க்கக் கூடாதா?" என்று எத்தனையோ ஆயிரம், ஆயிரம் மேடைகளிலே பேசி விட்டோம், தென்னாட்டில் மட்டும் ஏறத்தாழ 30000 ஆலயங்கள் இருக்கின்றனவே, இந்தப் புனித பூமியில்தானா வறுமை கோர நடனம் புரிய வேண்டும்" என்றும் பக்தர்களைப் போல ஏளனவேண்டுகோள் விடுத்தோம். அண்மையிலே வடநாடு சென்று வந்த வாரியார்கூடச் சொல்லி விட்டார், தென்னாட்டில்தான் கோயில் அதிகம்; காஞ்சி, மதுரையில் உள்ள கோயில்களைப்போல வடநாட்டிலே ஒன்று கூடக் காணப்படவில்லை என்று. பெருமைப் படுகிறார் அந்த பக்தர். எங்கே கோயில் இருக்கிறதோ அங்குதான் பஞ்சம் அதிகம் என்பதை — எங்கே ஆயிரம் கண்ணுடையாள்கள் இருக்கின்றார்களோ அங்குதான் கூன், குருடு அதிகம் என்பதை- எங்கே மந்திரத்திலே மாளிகைகள் எழும்பியதாக கதைகள் நிலவுகின்றனவோ அங்கேதான் வீடற்றவர்கள் வதைகிறார்கள் என்பதை அந்த வாரியார் சொல்லவில்லை!

உள்ளபடியே வாரியார் வடநாட்டிலே ஒரு பிச்சைக்காரனை கண்டிருந்தாலும், அதை ஓராயிரமாகப் பெருக்கிக் காட்டி, இங்கு வந்து பிரமாதமாக விளக்கிப் பேசக்கூடியவர். "இந்த நாஸ்தீகர்கள் இங்குதான் பிச்சைக்காரர்கள் அதிகமென்கிறார்கள், வடநாட்டிலும் உண்டு; தென்னாட்டை வடநாட்டார் கவனிக்கவில்லை என்பது பொய்! அபத்தம்" என்று உளறிக் கொட்டியிருப்பார். ஆனல் அவர் பேசவில்லை—பேச முடியவில்லை — வடநாட்டிலே அவர் கண்களுக்கு பிச்சைக்காரர்கள் தென்படவில்லை — வீடற்றோர் தட்டுப்படவில்லை. "கோயிலில்லா ஊரில் குடியிருக்கக் கூடாது" என்று பேருபதேசம்(!) புரியும் இந்த பக்திப் பரவசத்திற்கு வடநாட்டு யாத்திரை ஒரு படிப்பினைதான்! கோயிலில்லாத வடநாடு வளம் கொழிக்கும் சீமையாக இருக்கிறதல்லவா! நாம்மட்டும் ஏன் கோயிலில்லா ஊரில் குடியிருக்கக் கூடாது? தாராளமாக இருக்கலாம்!

வட நாட்டிலே ரயில் நிலையங்களில் தமிழ் பெயரைக் காணவில்லையாம்! தமிழ் வளர விரும்புவோர் முதலில் அங்கு சென்று கருப்பு மையால் தமிழில் எழுத வேண்டுமாம்! நமது இந்தி அழிப்புப் போராட்டத்தைக் கிண்டல்செய்கிறது கிண்கிணிப் பண்டாரம் வேடம்போட்டிருக்கும் இந்தப் 'பக்திக் கிண்ணிக் கோழி'! மொழிப் போராட்ட

● தொடர்ச்சி 8-ம் பக்கம்

ஏன்?

வடவர்கள் மூக்கில் விரல்வைத்தனர்!

வந்திருந்தோர் ஆரவாரம் செய்தனர்!

அத்தகு சிறப்புப் பெற்ற கலைவாணர் என். எஸ். கே.யின் ஆவடி நாடகக் காட்சிகள், — "தூரிய நடன"த்தையும், "சூளாமணி" நாடகத்தையும் படமெடுத்த வெளியிட்ட 'ஆனந்தவிகடனில்' வராததேன்?

பலவர்ணப் படங்களை முகப்பிலேபோட்டு மகிழ்ந்து வரும் 'கல்கி'— பண்டித நேருவே பிரமிக்கும் வகையில் ஆவடியில் ஓடியாடி பணிபுரிந்த காமராசரின் படத்தை முகப்பில் போடாதது ஏன்?

ஏன்? ஏன்? ஏன்?

காதல் வராத கதைகள் என்னவோ சோபிப்பதே இல்லை. காட்டுப் பாதையிலே—கானல் வெளியிலே நடந்து செல்பவர்களுக்கு, தூரத்திலே தெரியும் நகர்வளம் எவ்வளவு சுறுசுறுப்பை - கால்களுக்கு ஒரு வேகத்தைத் தருகிறது! அதைப் போலத்தான் வாழ்க்கைப் புத்தகத்தின் வர்ணம் கலந்த ஏடுகளைப் புரட்டுபவர்கள் கதாபாத்திரங்களின் காதல் லீலைகளிலே ஒரு ஆதரவைக் காண்கிறார்கள். எனக்கும் அன்றைய மாலைப்பொழுது காதல் இல்லாத கதையைப் போலத்தான் இருந்தது-சுவை இல்லை! செங்கதிர் உதயமானதும் உலகமே விழித்துக் கொள்ளும்போது கண்களைத் திறக்க மனமில்லாமல் அடுப்பைச் சுற்றிவரும் பூனைக் குட்டியைப் போல, ஊரெல்லாம் குதூகலமாயிருக்கும் அந்த நேரத்தில் நான் மட்டும் சோகத்தின் சாயல்படர பூங்காவின் ஓரத்திலே நகர்ந்து கொண்டிருந்தேன். மோட்டார் வண்டிகளின் மின்வேகம்-அதிலே உட்கார்ந்திருக்கும் மோகனாங்கிகளின் புன்முறுவல்—இதில் எதிலுமே என்மனம் செல்லவில்லை.

பூஞ்சோலையின் ஒரு மூலையிலே பூத்திருக்கும் புதுரோஜா இத்தனை நாட்களும் என் மனதிலே எவ்வளவோ இன்ப அலைகளை எழுப்பியிருக்கின்றன. "ராஜகுமாரிகளின் அந்தப்புரத்திலே பூக்காமல், இந்த பொதுப் பூங்காவிலே பிறந்து அயர்வால் துவண்டு போன நெஞ்சங்களுக்கு விருந்தளிக்கிறாயே அழகு ரோஜாவே, நீ வாழ்க!"—என்று சங்க காலப் புலவர்கள் தோரணையிலே நான் அதற்கு வாழ்த்துரைத்திருக்கிறேன். இப்போதோ அந்த ரோஜாவைப் பார்த்ததும் என் கண்களின் முன்னால் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இடுகாட்டிலே நடந்த அந்த சோகம் கப்பிய காட்சிதான் வந்து நின்றது.

★

புரட்சிவசியன்! எவ்வளவு அழகான பெயர்! வாலிபம் ஆட்கொண்ட உருவம். அந்த வயதிலேயே அவன் சமாதியாகிவிட்டான். உயர் எண்ணங்களை உருவாக்கும் அந்த எழுத்து வேந்தனின் மார்பிலே, நான், அன்று பூத்திருந்த ஒற்றை ரோஜாவைத்தான் எனது கடைசி காணிக்கையாக வைத்தேன். அவன் மட்டும் உயிரோடு இருந்திருந்தால் பசிக் கொடுமையைத் தாளாமல் அந்த ரோஜாவை மென்று தின்றிருப்பான். பாவம்! அந்தப் பிணத்திற்குப் பசி இல்லை; வாயைத் திறக்கும் சக்தி இல்லை; அந்த ரோஜாவும் தப்பித்தது!

"எழுத்தாளனுக்கு பேனாவும், புத்திசாலித்தனமும் மட்டும் இருந்தால் சோறு கிடைக்காது, சார். கொஞ்சம் மனசாட்சியை சந்தைப் பொருளாக்க வேண்டிய பண்பும் இருக்க வேண்டும்! அப்போதுதான் அவன் வீட்டுப் பானை பொங்க முடியும்"—என்று என்னைப் பார்க்கும் போதெல்லாம் அவன் சொல்லும் இந்த வாசகங்கள் என் சிந்தனையை வட்டமிட்டன.

மனசாட்சியை மரக்கட்டையாக்கிக் கொள்ள வேண்டுமாம்!- எவ்வளவு பயங்கரமான செயல்!

சோகத்தை மாற்றிக் கொள்வதற்குத்தான் நான் பூஞ்சோலைக்கு வந்தேன். ஆனால் துன்ப நினைவுகளோ என்னை விட்டு அகல மாட்டேன் என்றன. இந்தப் பழைய நிகழ்ச்சிகளே இப்படித்தான்—ஒட்டுப் புல்லைப் போல அவை நகருவதே இல்லை; எடுத்து வீசினால் கூட நம்மோடுஒன்றி விடுகின்றன!

திடீரென்று ஒரு கைதட்டல் என் நினைவின் லகானைப் பிடித்து நிறுத்தியது. தேன்கூட்டிலே ஈக்கள் கூடியிருப்பதுபோல மக்கள் திரள்! ஆமாம்; பூங்காவிலேதான் ஒரு பொதுக்கூட்டம் நடக்கிறது. "ஏதாவது தேர்தல்கூட்டமாயிருக்கும்; அல்லது தேவாலய பஜனைக் கூட்டமாயிருக்கும்"--என்றுதான் நான்முதலில் நினைத்தேன். கடைசியில் நான் நினைத்தது தவறாக முடிந்தது. மேடையிலே பெரியபுகைப் படமொன்று வைக்கப்பட்டிருந்தது. கொஞ்சம் உற்று கவனித்தேன். எலும்புக் கூட்டின் மீது தோலாடை உடுத்தியிருந்த அந்த உருவம் புரட்சிவசியனுடையது தான்.

ஏழை எழுத்தாளனுக்கு இரங்கற் கூட்டமா?—ஒரு கணம் நான் சிலையாகி விட்டேன். மேடையின் பக்கம் சென்றேன். பிரபல தனவந்தர், தர்ம தாதா, இருபதாம் நூற்றாண்டின் பாரிவள்ளல், என்றெல்லாம் புகழப்படும் கனவான் கருப்பையா முதலியார்தான் தலைமை வகித்திருந்தார். செத்துப் போன எழுத்தாளர்களுக்கும், மேதைகளுக்கும் நினைவுச் சின்னம் எழுப்புவதையே பொழுது போக்காகக் கொண்ட ஸ்ரீமான் சிவநேசன் மேடைஅதிரப் பேசிக்கொண்டிருந்தார்.

"இங்கு கூடியிருக்கும் கலாரசிகர்களே! இலக்கிய மேதைகளே! உங்கள்எல்லோருக்கும் என் நமஸ்காரம். பிரபல புத்தகமான வால்நட்சத்திரத்தை பாராட்டுவதற்கும், அதை எழுதிய இலக்கிய சாகரமாம் ஸ்ரீமான் புரட்சிவசியருக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதற்காகவும்தான் நாம் இங்கு கூடியிருக்கிறோம் என்பதை யாவரும் அறிவீர்கள்.

"ஸ்ரீமான் புரட்சிவசியன்சாமான்யரல்ல; கற்பனா ராஜ்யத்தின் எல்லையைக் கண்ட கடவுள்! வால்நட்சத்திரமென்னும் அவருடைய நாவல் நம்முடைய சமுதாயத்தின் நிலை விளக்கும் கண்ணாடி; தமிழ்த் தாயை அலங்கரிக்கும் பொன்னாபரணம்; நமது நூல்நிலையத்திலே கண்போலக் காத்துவரவேண்டிய பொக்கிஷம்.

"ஆபாசப் புத்தகங்களெல்லாம் கடைகளிலே ஏராளமாகக்குவிந்து வரும் இந்த நேரத்திலே வால்நட்சத்திரம் போன்ற புத்தகங்களின் பெருமை சொல்லுதற்கரியது!

"நிக்கல் நாணயத்துக்கு நிர்வாண நங்கையர்"-இப்படி புத்தகம் வந்திருக்கிறது. இன்னும் எத்தனையோ புத்தகங்கள்—"வேசையரின் லீலாவிநோதங்கள்"—"காசைப்போடு; கட்டிப் பிடி"—இப்படி பலப்பல ஆபாசக் களஞ்சியங்கள் வெளிவந்திருக்கின்றன. "இன்பப் பித்தன்" என்பவர்தான் இதன் ஆசிரியராம்.

"இந்தமாதிரி அசுத்தங்களை கைகளினால் தொடாதீர்கள். பெட்ரோல் ஊற்றி கொளுத்தி எறியுங்கள். இன்பப் பித்தன் போன்ற ஊதாரிகளுக்கு உதைகொடுங்கள். காரி உமிழுங்கள். 'வால்நட்சத்திரம்' போன்ற புதுமைக் காவியங்களைப் படித்துப்பயன் பெறுங்கள்; புரட்சிவசியன் போன்ற எழுத்துலக சிற்பிகளுக்கு கை கொடுங்கள்!"

—இப்படி பேசிவிட்டு உட்கார்ந்துவிட்டார். கோடை இடி போன்ற கைதட்டல் ஒலி என் காதுகளைத் துளைத்தது.

இடிவிழுந்து கருகிப் போன மரம் யாரும் எதிர்பாராத விதமாக சிலசமயம் தளிர்விட்டு துளிர்ப்பதில்லையா? அதைப் போலத்தான் இந்த எழுத்தாளர்கள் நிலையும். முனிசிபாலிட்டியின் குப்பைத் தொட்டிக்குப் போய்விட்டன என்று அவன் நினைத்திருந்த கதைகள்கூட இப்படித்தான் சிற்சில சமயங்களில் மலையுச்சிக்கு ஏற்றி வைக்கப்படுகின்றன; மகாகாவியம் என்று புகழப்படுகின்றன.

இருந்த போதும் அந்த பேச்சாளரின் இடிமுழக்கத்தைநினைக்கும் போது எனக்கு சிரிப்புத்தான் வந்தது. புரட்சிவசியனுடைய எழுத்துகள் ஜீவசக்தி வாய்ந்தவை என்று தீர்ப்பு வழங்குவதற்கு ஜட்ஜுகளும், ஜூரிகளும்தேவையில்லாமலிருக்கலாம்; ஷேக்ஸ்பியரும், ஷெல்லியும் அவனது கற்பனைத் திறமையின் முன்னே எதிர் நிற்க முடியாத வலுவினராகிவிடலாம்; ஒரு புரட்சிவசியன் மட்டும் ஒப்புயர்வற்ற இலக்கிய மேதையாக இருந்து என்ன பலன்? பூனைக்குட்டிகளின் பக்கத்திலே ஒரு பஞ்சவர்ணக் கிளியையும் வைத்து, சாலையோரத்திலே வித்தைகாண்பிப்பவன் காசு பறிப்பானே அதைப் போல் அல்லவா, இதே புத்தக வியாபாரிகள் ஒளிவீசும் 'வால் நட்சத்திரம்' இருக்க, 'இன்பப்பித்தன்' எழுதிய சாக்கடைக் கும்பியை, புழுதித் திரளை, அழுக்கு மூட்டையை — 'நிக்கல் நாணயத்துக்கு நிர்வாண அழகிகள்' என்பன போன்ற நூல்களையுமல்லவா விற்பனைசெய்கிறார்கள்? இப்படித்தான் தமிழகம் இலக்கியத்தை வளர்க்கிறது என்று நினைக்கும்போது நான் சப்தம்போட்டே சிரித்துவிட்டேன். எனக்கு சிரிப்பு வந்த உண்மையான காரணத்தைக் கேட்கிறீர்களா? இதோ சொல்லி விடுகிறேன்.

மழை பெய்ததும் காளான் முளைப்பதைப்போல இந்த உல... தில் எப்படித்தான் இவ்வ... எழுத்தாளர்கள் தோன்று... களோ? அப்படி புது எழுத்... பட்டியல் தோன்றுவிட்... புரட்சிவசியன் போன்ற பல... எழுத்தாளர்களுக்கு ஏதா... பிழைப்பு நடந்து கொண்டா... இருக்கும்.

பாவம்! புரட்சிவசியன்... என்ன செய்வான்? பேனாவு... மசிவாங்கி ஊற்றுவதற்குக்... அவன் கையில் ஒரு நாண... துண்டு கிடையாது. புத்திர பா... யத்தில்தான் இந்தக் கால... மனிதர்கள் பன்றிகளோடு... போட்டி போடுகிறார்களே! புர... வசியனும் இந்தப் போட்டி... கலந்து கொண்டான்—அ... டஜனுக்கு மேற்பட்ட குழந்... கள்; அன்பே உருவான மனை... இத்தனை பேருக்கும் அவன்சோ... போட வேண்டும்.

இந்த வறுமைக்கும், பே... பிடிக்கும் தொழிலுக்கும் என்... உறவோ தெரியவில்லை. கரைய... புற்றெடுத்தவுடன் பாம்பு கு... யேறிவிடுமே அதைப்போல் அ... வா, கொஞ்சம் கற்பனை வ... கொண்டவர்கள் இடத்தில், த... திர நாராயணனும் வந்து சேர்... விடுகிறான்! ஆனாலும்ஒரே ஒரு உ... மையை ஒளிக்காமல் சொல்... தான் ஆகவேண்டும். சிறுகுட... பெருங்குடல் கடித்துத் தின்... ஆரம்பிக்கும் போதுதான் இ... எழுத்தாளர்களும் நல்ல எழுத்... களின் தாயாகுகிறார்கள்; இல்... விட்டால் அரேபிய நாட்டு ராஜ... களைப்போல "ஹாயாக" உ... கார்ந்து கொண்டு ஏதாவது க... டதைக்கிறுக்கித்தள்ள ஆரம்பி... விடுவார்கள்.

ஏழ்மை மட்டும் இல்லாவி... டால் புரட்சிவசியன் "வால்நட்... த்திரம்" போன்ற மகத்தா... காவியத்தை சிருஷ்டித்திரு... முடியுமா? ஊம்; அவன் காவி... கள் எழுதி குவித்துதான் என்... பலன்?

குடுகுடுப்பைக்காரன் ஒவ்வொ... வீட்டுப் படியாக ஏறிச் சென்... "நல்லகாலம் வருது! நல்லகால... வருது!" என்று உச்ச ஸ்தாயி... முழங்குவானே; அதைப்போல... தான் புரட்சிவசியனும் ஒவ்வொ... புத்தகக் கம்பெனிக்கும் சென்... "வால்நட்சத்திரத்தை வெளியி... டீர்களேயானால் வெளியிடும் உங்... ளுக்கும், எழுதிமுடித்த எனக்கு... நல்லகாலம் வந்துவிடும்!"—என்... "கிராமபோன் ரிக்கார்டை"... போல சொன்னதையே திரும்ப... திரும்பச்சொன்னான்.

அப்படி அவன் ஏறி இறங்கி... கம்பெனிகளில் ஒன்றுதான் ஜ... பப்ளிகேஷன்ஸ், அதன் உரிமை... யாளர்தான் சண்முகானந்த... பிள்ளை! வால்நட்சத்திரத்தை ஒ... முறை படித்துப் பார்த்து விட்... அவர் இப்படித்தான் சொ... னார்; "மிஸ்டர் புரட்சிவசிய... வானத்திலே வால்நட்சத்திர... உதயமானால் அதற்குப் பல... என்ன தெரியுமா? ராஜாங்கத்த... குக் கேடுவந்து சேரும். உம்... டைய புத்தகமும் அப்படி... தானய்யா இருக்கிறது; நீர்எழுதி... வால்நட்சத்திரம் கருத்துக்கு விரு... தளிக்கலாம்; குருத்து விட்... வாழையைப்போல இதன் மூல... உம்முடைய புகழ் கூட தழை... தோங்கலாம், இருந்தாலும் என...

Filmed as bound

எப்படியும் உம்முடைய
ழ்க்கை ராஜாங்கத்'துக்கு
துவந்தே தீரும்.

ன் சொல்கிறேன் என்று
த்தப் படாதீர்கள், இதோ
"பிளேட்பாரத்துக் காதலீ
"பிசினஸ்கார மனைவி"—
டிப்பட்ட புத்தகங்கள்
யா அச்சானவுடன் ஆயிரக்
இல் பறக்கின்றன, மார்க்
நிலவரத்தைப்பார்த்து நீரும்
ங்கள் எழுதினால்தான் இங்
ாலத்தில் பிழைப்பு நடத்த

த மட்டும் மனதிலே
டுவையுங்கள்; உம்முடைய
நட்சத்திரம் அமர காவிய
க்கலாம். ஆனால் அமர
ங்களெல்லாம் சேத்த பிறகு
டைய பெயா சொல்லி ஒப்
வைப்பதற்குத்தான் உப
படும் சார்! நிகழ் காலத்
செப்பனிட்டுக் கொள்வதற்
வருங்காலத்தைப்பற்றி
வலைப்படுகிறீர்? உயிரோடி
போது ஜீவ இலக்கியங்கள்
போடாது மிஸ்டர்!

பசாமல் நான் சொல்வதைக்
ம், ஆபாசப் புத்தகங்கள்
சொல்கிறீரே, அதைப்போல
ஜன் புத்தகங்கள் எழுதித்
'இம்மிடியேட்'டாக
நோட்டுகளை அள்ளிக்
க்கிறேன். இப்போதே
ன்ஸ் வாங்கிக் கொள்கி
—இப்படி ஒரு பெரிய
க்குறியோடுதனதுபேச்சை
ார் ஜாலி பப்ளிகேஷன்ஸ்
ளி.

ருக்கு ஓங்கி ஒரு அறை
க்கலாமாஎன்றுதோன்றியது
வசியனுக்கு! "ஆபாசப்
ங்கள் எழுதவேண்டுமாம்-
நட்சத்திரம்" போன்று
மே வியக்கும் நூலொன்
ழுதியவனு பூச்சி புழுக்கள்
ம் சாக்கடையிலே
வ நினைத்து எழுதுவது?
வசியன் தற்கொலை செய்து
டான் என்கிறசெய்திதான்
ன்ற தமிழ்த்தாய்க்கு
ாக இருக்கும்!"— இப்ப
ன் ஆவேசம் வந்தவனைப்
அவன் கர்ஜனை புரிந்தான்.
ல் அல்ல; மலத்தால் மாலை
து, அதை தமிழ்த்தாய்க்கு
க்கும் ஆட்டுமதியினரே!
ஒழிப்பதுதான் தமிழுக்கு
ப்படும் முதல் சீர்திருத்த
ருக்க வேண்டும்"—அதற்
அவனால் அங்குபேசமுடிய
நாடகத்திலே ஆவேசப்
க்குப் பிறகு வில்லன் திரு
ர், அதைப்போல கனல்
பார்வையொன்றை விசி
புரட்சிவசியன் நடையை
ஒன்.

ரிக்கமேதை வால்ட்விட்
தன் முறையாக "புல்லு
என்னும் இலக்கியத்தை
போது, புத்தக வியாபாரி
லாம் அவரை இப்படித்
ிரட்டினார்களாம். வால்ட்
க்கு நேர்ந்த கதி தனக்கும்
றதே என்று நினைக்கும்
அவனதுஉள்ளம் மகிழ்ச்சி
ங்கியது. செத்தாலும்இலட்
க விற்று, சில்லரைக் கதை
ழுதமாட்டேன்-என்று அவ
ப் ஒருமுறை முணுமுணுத்
டிக்காற்றிலே பறக்கும்
அன்டைப்போல அவன்
எங்கேயோ வேகமாக நடந்து கொண்டிருந்தான்.

ஆமாம்; அவன் இப்போது எங்கே செல்வது?

வீட்டிற்குச் சென்றாலோ வேதனையின் வடிவங்களாய் நிற்கும் மனைவி மக்களைத்தான் சந்திக்க வேண்டும். மூன்று மாதங்களாக வீட்டு வாடகை பாக்கி நிற்கிறது. அதை வசூலிக்க வீட்டுக்காரன் வேறு வந்து விடுவான். எப்படியோ தள்ளாடித் தள்ளாடி வீடுவந்து சேர்ந்தான்.

பாவம்! நிலைப்படியை தலையணையாக வைத்து அவனுடைய மனைவி தூங்கிக் கொண்டிருந்தாள்-அவளுக்குப் பக்கத்திலே எழுத்தாளன் பெற்ற மதலைகள் யாவும் பசியால் வாடிக்கிடந்தன. சினிமாக்காரர்கள் யாராவது அவனோடு வீட்டுக்கு வந்திருந்தால் இப்படித்தான் அந்தக் காட்சிகளைச் சித்தரிப்பார்கள்.

முதலில் பூனை தூங்கும் அடுப்பைக் காட்டுவார்கள்-அதற்குப் பக்கத்திலே வாய்திறந்து, காற்றை மட்டும் அடைத்து வைத்திருக்கும் அரிசிப் பானையைக் காட்டுவார்கள்—தாயைக் கண்டு தாவி ஓடும் கன்றைப்போல அப்பாவின் மீது பாய்ந்து, ஜோபியைத் துழாவும் குழந்தைகளின் மகிழ்ச்சியையும், பின்னர் அந்த பிஞ்சு முகங்களிலே ஏமாற்ற ரேகைகளையும் காட்டுவார்கள்-பின்னர் பயங்கரமான பின்னணிகளோடு புரட்சிவசியனின் முகத்தைக் காட்டுவார்கள்—கடன் கொடுத்தோர் அணிவகுப்பு அவன் முகத்தின் மீது நகரும்.

திடீரென்று திரையிலே ஒரு ஒலி கேட்கும், ஜாலி பப்ளிகேஷன்ஸ் முதலாளியின் குரல்தான் அது:
"அமரகாவியங்களெல்லாம் சேத்த பிறகு உம்முடைய பெயர் சொல்லி ஒப்பாரி வைப்பதற்குத்தான் உபயோகப்படும், சார்! நிகழ்காலத்தைச்செப்பனிட்டுக் கொள்வதற்கு முன் வருங்காலத்தைப்பற்றி ஏன் கவலைப் படுகிறீர்? உயிரோடிருக்கும் போது ஜீவ இலக்கியங்கள் சோறு போடாது. மிஸ்டர்!"
இந்த ஒலிகள் ஒரு முறை திரையிலே முழங்கி ஓய்வு பெறும்.

மீண்டும் புரட்சிவசியனின் முகம்-அதில் இப்போது வியர்வைத் துளிகள்!

"முடியாது - முடியாது-என்னுடைய மனச்சாட்சியை ஒருக்காலும் அடகு வைக்க முடியாது" அசைவினால் இப்படி வார்த்தைகளுக்கு ஒலி வடிவம் தருகிறது அவனுடைய உதடுகள்,

வீட்டுக்காரன் வாடகை கேட்கிறான்-பால்காரன் பாக்கித் தொகைக்காக சண்டை பிடிக்கிறான், குழந்தைகள் பசியால் அழுகின்றன. மனைவி கண்கலங்குகிறாள்.

திரும்பவும் திரையிலே ஒரு குரல்—இந்தத் தடவையும் அது ஜாலி பப்ளிகேஷன்ஸ் முதலாளியின் குரல்தான்! ஆனால் இப்போது அந்தக் குரலிலே ஒரு கனிவு இருக்கிறது. பாசம் தொனிக்கிறது.

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்



கதிர் விழுங்கி—மதிஉமிழும் கடலே! நில மடந்தைக் கெழிலூட்டும் நீல உடையே! ஜகப்பெண்ணாளின் சந்தன மேனியில் சலசல வெனப் பறந்தாடும் சல்லாத்துணி நீ! பச்சைச் சிசுவின் பவள உதட்டிலே வழிந்து நிற்கும் பால்—கரையில் நீ உமிழும் நுரை—இரண்டும் ஒன்று! அசைந்தாடும் அழகு உதிர் அலைக் கரங்களால் அருமையான சங்குகளை நீ அள்ளி இறைப்பது; செங்கரும்புச் சிறுகைகளால் குழந்தைகள் செய்யும் இன்ப விஷமத்தை உணர்த்திக் காட்டுகிறது. ஓய்வு பெற உன்பால் வருவேன். ஓசை முழக்கத்தால் உள்ளத்தைத் தாலாட்டுவாய். தூங்காப் பெருங்கடலே! தூய்மை நிறை நம் சந்திப்பில் சிறு தொய்வு ஏற்பட்டு விட்டது. ஆனாலும் கடலே! என் மடலுக்குப் பதில் எழுது.

"உழைக்கும் பாட்டாளி—உயரும் முதலாளி — உண்மை நவில் அறிஞன்-உயர் பண் தரும் கவிஞன்-சிற்பி-சித்திரக்காரன்-சிந்தனையாளன்—எல்லோருக்குமே ஓய்வு உண்டு. உனக்கு ஓய்வே கிடையாதே, ஏன்? 'ஓயாமல் உழைக்கிறேன் பார்' என்று உடல் வளையா சோம்பேறிகட்கு சொல்லிக் காட்டுகிறாயா?" என்று முன்பெல்லாம் கேட்பேனே; அதைக் கேட்பேன் என்று எண்ணுகிறாயா? இல்லை; இல்லை!

கற்கண்டுக் கையால் கஞ்சியைத் துழாவித் தந்து, அதைவிட இனிப்பான முத்தம் தந்து, காலையிலே கட்டுமரத்தில் வழியனுப்பி வைக்கப் பட்ட காதலன்—கதிரவன் சென்றும் வரக்காணேனே என்று கண்சோர, கால்சோர, குடிசையின் வாசலிலே எதிர் பார்த்து ஏங்கித் தவிக்கும் ஏந்திழையாள், உன்னை நம்பி வாழும் குடும்பத்தின் இளஞ்சிட்டு. சிங்காரச் "செம்படச்சி"—அவள் அயர்ந்து போகாமல், இடிந்து மாளாமல், அவள் கணவனை அன்றாடம் உன் நீலமணித் தோள்களிலே தூக்கி வருகிறாயா? என்று கேட்பேனே — அதைத்தான் கேட்கப் போகிறேன் என்று கருதுகிறாயா? இல்லை—இல்லை.

கடல் மாதா காப்பாற்றுவாள் என்று நம்பி, ஓரத்திலே முளைத்திருக்கும் ஓலைக் குடிசைகளைத் தூக்கி எறிகிறாயே; தொழிலாளிகள் என்றால் உனக்குமா துரோக புத்தி—என்று கேட்டிருக்கிறேன்—பலமுறை கேட்டிருக்கிறேன்—அதையல்ல இப்போது கேட்கப் போவது!

முத்துப் பெருங்குளமே!

சிறைச்சாலையிலே, என் சிந்தனை அலைச்சலிலே, அன்றொரு நாள் நீ செய்த அட்டூழியம் தலைகாட்டி மறைந்தது. கவின் நிறை நகராம்—தமிழரின் செல்வப் பூங்கா—காவிரிப்பூம்பட்டினத்தை அலைக்கரம் நீட்டி அழித்துப் போட்டாயாம்! ஏன் அந்த அநியாயம் புரிந்தாய் என்று கேட்கவில்லை. அதற்காக வழக்குத் தொடரவும் போவதில்லை.

ஆனால் கடலே! எம் செல்வத் திருநகரின் செழிப்பை அழித்தனையே! அதுபோல் பொல்லாத வடநாட்டுச் சின்னத்தை அழித்திடத்தான் துள்ளாதோ கல்லக்குடியில், உன் கரம்!

மடலுக்குப் பதில் எழுது!
இல்லையேல் மௌனமாய் இரு!

இரண்டுமே உன்னால் முடியாத காரியம்!

அவுரங்கசீப் தோற்ருன் !

மதுரை மன்னன் கொலுமண்டபம். மன்னன் முத்துவீரப்பனின் முகம் கோபத்தால் பழுக்கக் காய்ந்த இரும்புக் குண்டாக இருந்தது. நகருக்கு வெளியே முகலாயப் படை காத்து நிற்பதாகவும், அவர்கள், தங்கள் அரசனின் மிதியடிக்கு மதுரைப் பாண்டியன் முத்துவீரப்பனிடம் மரியாதை பெற வந்திருப்பதாகவும் சேவகன் சொல்லக் கேள்விப்பட்டதும் முத்து வீரப்பன் வெகுண்டான். ''கேவலம்! டெல்லியிருக்கும் மகமதிய ராஜாவுக்கு, பாண்டியக்குலத் திலகம் பாதம் பணிவதா? அமைச்சரே, முகலாயர்களுக்கு இந்த முத்து வீரப்பன் பணியமாட்டான் என்று சொல்லிவிடுங்கள்! காலம் வாய்க்கும்போது முகலாயர்கள் அனுப்பிய மிதியடிக்கு மிதியடியாலேயே மரியாதை செலுத்துவோம்.'' என்று கர்ஜித்தான்.

ரங்ககிருஷ்ண முத்துவீரப்பன் 1682-ல் மதுரைக்கு நாயக்க வம்சத்து அரசனுக வந்தவன். மதுரையின் மாண்பினை உயிர்த்திட வழிகோலிய காவலன் முத்துவீரப்பன். முத்துவீரப்பன் முடிசூட்டிக் கொண்ட நேரம் மொகலாயப் பேரரசன் அவுரங்கசீப் பீஜப்பூரையும், கோல்கொந்தாவையும் தன் காலடிக்குக் கொண்டுவந்த நேரம். அவுரங்கசீப்பின் ஆசை அந்த அளவோடு நின்றுவிடவில்லை. தென்புலத்து வேந்தர்களையும் தன் கட்டளைக்குப் பணிபுரியும் தாசர்களாக்கிக் கொள்ள எண்ணினுன். அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் தனது மிதியடியை அனுப்பி மற்ற மன்னர்களிடம் அந்த மிதியடிக்கு மரியாதை பெற்றுவர ஆள் அனுப்பிவந்தான். அவ்வாறு வந்த மிதியடிதான் முத்து வீரப்பனின் சுடுசொல்லுக்கு பாத்திரமாகிவிட்டது.

செந்தமிழ் பாண்டியனின் சிம்மக்குரல் கேட்ட அவனின் அமைச்சர்கள், வேந்தரின் வேகத்தைத் தணித்து மொகலாயப் படைக்கு ஒரு ஆறுதலான பதிலைக் கேட்டனர். அதன்படி முத்துவீரப்பன் உடல் நலம் குன்றியிருப்பதாகவும், இன்னொரு முறை மொகலாயப் படைக்கு திருச்சிக்கு அருகே உள்ள சமயபுரத்தில் மரியாதை செலுத்துவதாகவும் சொல்லி அனுப்பிவைத்தனர். நாட்கள் நகர்ந்தன.

முகம் கருத்து நாடு திரும்பிய மொகலாயப்படை, முத்து வீரப்பன் எப்போது திருச்சி வருவான் என்று காத்துக் கிடந்து அந்த நேரத்தில் திருச்சி வந்துவிட்டார்கள். ''மொகலாயப் பேரரசுவின் மிதியடிக்கு தாங்கள் மரியாதை செலுத்தியே ஆகவேண்டும்'' என்ற கண்டிப்புத் தகவலைத் தாங்கி ஓலை வந்தது. முத்துவீரப்பன் முணுமுணுத்தான். ''முடியாது; எனக்கு உடல்நிலை சரியில்லை'' யென்று பதிலிறுத்து விட்டான். செய்தியறிந்த மொகலாயப்படை சீற்றம் கொண்டது. வெற்றிதேடிப் போகாவிடில் கொற்றவன் அவுரங்கசீப்பின் கோபத்திற்கு ஆளாகநேரிடுமே என்று எண்ணி அவர்கள் முன்னறிவிப்பின்றி முத்துவீரப்பன் தங்கியிருந்த அரசவைக்குள் நுழைந்துவிட்டனர். முத்துவீரப்பன் முறுக்கு மீசையை தடவிக்கொண்டு அரியணையில் வீற்றிருந்தான். தமிழ் வேந்தன் தனக்கு மரியாதை காட்டுவானென்று எதிர் பார்த்த டில்லிப்படை ஏமாந்தது. ''பாண்டிய மன்ன, பாதுஷாவின் பாதரட்சை இதோ! மரியாதை செலுத்தும்'' என்று மொகலாயப் படைவீரன் ஒருவன் கேட்டான்.

''மிதியடியைப் போடு கீழே! மன்னாதி மன்னவனும் எதிர்க்கவஞ்சும் முத்துவீரப்பனின் முன்பாக சிரம் தாழ்ந்திப் பேசு!''—முத்துவீரப்பன் சூருவளியாகப் பேசினுன்.

''தமிழ் வேந்தரே, இமயத்து அடிவாரத்தின் எமது பேரரசை இன்முகம் காட்டி வரவேற்காத சிற்றரசுகள் முடிவு உமக்குத் தெரியுமா?''

''படை வீரா, இந்த இடத்தில் நான் அரசன். ஆணையை மீறினுல் அவதிக்குள்ளாவாய்! இம்ம் மிதியடியைப் போடு கீழே!''

பாதுஷாவின் மிதியடி கீழே போடப்பட்டது. முத்து வீரப்பன் அந்த 'ஒற்றை மிதியடியை' ஒரு காலில் அணிந்து கொண்டான். ''டில்லி வீரர்காள் உங்களுக்கு ஒரு வேண்டுகோள்! மண்ணாசையால், சுயநினைவு அற்றுப்போயிருக்கும் உமது ராஜாவிடம் சொல்லி இன்னொரு செருப்பையும் அனுப்பச் செய்யுங்கள். பரிசனுப்பும் வேந்தர் ஒற்றை மிதியடியையா அனுப்புவது? போங்கள்! போய் இன்னொரு மிதியடியையும் கொண்டு வாருங்கள். அதன் பின்பு பரிசுக்குகந்த எனது நன்றியை பாதுஷாவிடம் தெரிவியுங்கள்'' என்று கிண்டல் செய்தான் முத்துவீரப்பன். வெட்கமும், துக்கமும் தாளாமல் மொகலாயப் படை டில்லி திரும்பியது. செய்தியறிந்த அவுரங்கசீப் ஆற்றெணுத் துயரடைந்தாலும் அன்று முதல் மிதியடி அனுப்பும் தீப்பழக்கத்தை நிறுத்திவிட்டானும். இது, வரலாற்று ஆசிரியர்களில் ஒரு சாரார் கருத்து.

ஜீவசக்தி !

"அடுக்கு மொழியாலேயே அழகு தமிழ் நடையாலேயே, மக்களை மயக்கிவிட முடியுமா? 'பத்தித்திரு சத்தித்திரு முக்திப்பெரு' என்பதைக் காட்டிலுமா நாங்கள் சொற்களை அடுக்கிக் காட்டிவிடுகிறோம்? பின் எப்படி எங்கள் வாசகத்துக்கு உருகினுர்கள் மக்கள்?

"இன்று நாங்கள் பெற்றுள்ள வளர்ச்சிக்கு, நாங்கள் கொண்டுள்ள இலட்சியத்திலே உள்ள ஜீவசக்தி, நியாயம் இவைதானே காரணமாயிருக்க முடியும்?"

அண்ணா

குண்டு......

5-ம் பக்கத் தொடர்ச்சி

நேரத்தில், மதுரை ஆடி வீதியிலே 'அரோகரா' போட்டுக் கொண்டிருந்த 'பணக்கார அன்னக் காவடிகள்' நமக்கு யோசனை கூறுகிருர்கள்; அதுவும் தமிழ் வளர விரும்புவோர் வடநாடு சென்று தமிழில் எழுத வேண்டுமாம்! தன்னை, தமிழ் வளர எண்ணுவோரின் எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளவில்லை— இப்படிப்பட்ட துரோகிகளுக்குக்கூட இந்த வாரத்து எழுத்தாளர் மாநாட்டு பிரமுகர்களில் எத்தனைபேர் சொந்த இல்லங்களிலே விருந்து வைத்திருக்கிருர்கள் தெரியுமா? முதலில் வடநாடு செல்ல வேண்டுமாம் மொழிப் போருக்கு! பாவம், அவர் அஜீரணத்திலேயே உழல்பவராக இருக்கக் கூடும், முறைப்படி சாப்பிட்டால்தான் ஜீரணமாகும் என்பது நிச்சயமாக அவருக்குத் தெரிந்திருக்காது. இல்லாவிட்டால் மொழி வளர 'தலைகீழ்வழி'யை காட்டுவாரா?

✶

மாலை நேரம்......

✶ 2-ம் பக்கத் தொடர்ச்சி

அதே புரட்சிவாதிகள் 1919ல் ஆங்கிலேயரை சரணடையச் செய்தது எதனுல்? ஒரு இயக்கத்தின் தன்னம்பிக்கைதான்— வாழ்வா, சாவா, என்ற ஜீவ லட்சியம்தான் வெற்றிக்கு மூல காரண மென்பதை நான் ஒப்புக் கொள்ளத் தயங்கவில்லை,

★

இரவு மணி ஏழாகி விட்டது குரலைக் கவனித்தேன். ஒலிக்கவில்லை! ஊருக்குள்ளிருந்து சிறுசிறு கூட்டங்களாக இளைஞர்கள் ஆற்றங்கரைப்பக்கமாக வந்தார்கள். அவர்கள் சொன்னபிறகுதான், 'இந்தியா ஒரு நாடல்ல அது ஒரு துணைக் கண்டம்; ஆகவே டில்லி வாசிகள் நமக்கு அந்நியர்கள்தான்'' என்று சரிதம்காட்டிப் பேசிவரும் கட்சியைச் சார்ந்தவர்கள் நடத்திய பொதுக் கூட்டத்தின் ஒலி அலைகள்தான் நம்காதில் இவ்வளவு நேரம் மோதியவை என்று அறிந்தேன்.

★

மிகச் சிறந்த தமிழ் நூல்கள்!

கவிஞர் கண்ணதாசன் எழுதிய

ஈழத்து ராணி	ரூ.	1—0—0
கூட்டுக் குரல்	ரூ.	1—0—0
தமிழர் திருமணமும்—தாலியும்	ரூ.	0—6—0
இலக்கியத்தில் காதல் (காரை முத்துப் புலவர்)	ரூ.	1—4—0

பிரஞ்சு இலக்கிய மேதை எமிலி ஸோலாவின்

தெரேஸா(நாவல்) (தமிழாக்கம்: குயிலன்)	ரூ.	2—0—0

அருணேதயம்

13, நல்லண்ணமுதலி சந்து, ராயப்பேட்டை, சென்னை-14.

★ நம்பலாமா? ★

சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

“ராகு காலத்தில் எதுவும் செய்யக் கூடாது; செய்தால் உருப்படாது என்கிறார்களே—அது உண்மைதானா?” என்று கேட்டிருக்கிறது சென்னைத் தங்கை ரத்னா.

ஆமாம்; அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் இன்னும் பலர். அவர்கள் பயங்கரப் புயலுக்கோ, பாழும் பிரளயத்திற்கோ கூட பயப்பட மாட்டார்கள். அணுகுண்டும் ஹைடாரஜன் குண்டும் கூட அவர்களை பயமுறுத்துவது சந்தேகமே! ஆனால், ராகுகாலம் என்றாலோ அவர்களுக்கு ஒரே பயம்!—ஒரே நடுக்கம்!

மேல்நாடுகளில் எல்லாம் ராகு காலத்தையா பார்க்கிறார்கள்? அல்லது அதைக் கண்டு தான் பயந்து ஓடுகிறார்களா? அதே ராகுகால நேரத்தில் அவர்கள் உருப்படியான காரியங்கள் ஆயிரம் ஆயிரமாகச் செய்யவில்லையா?

ஆகவே, ராகுகாலம் என்பது மூட நம்பிக்கை. நம்மை நாமே ஏய்த்துக் கொள்ளும் மாயவார்த்தை! அப்படி ராகு காலத்தை மூடநம்பிக்கையாக்கிச் சிரித்த ஒரு தம்பியின் கதை இவ்வாரம் வருகிறது; படியுங்கள்:

★

அமைதியாக இருக்கும் நேரத்தில் திடீரென்று எரிமலை வெடித்தால்... எவ்வளவு பயங்கரமாக இருக்கும்? அப்பப்பா! அதைப்போலத்தான், எப்போதும் சிரிப்பும் களிப்புமாக இருக்கும் கண்ணனின் வீட்டில், திடீரென்று ஒருநரகலை தோன்றியது. வீடு அல்லோலப்பட்டது! ஒரே வேதனை—சோகம்!

அந்தத் திடீர் பயங்கரத்திற்குக் காரணம்தான் என்ன? வீட்டின் அறையில் சூழ்ந்திருக்கும் கூட்டத்தை விலக்கிவிட்டு உள்ளே பார்ப்போம். அங்கே படுக்கையில் கிடக்கிறார் கண்ணனின் அப்பா. இருந்தாற்போல் விருந்து அவர் மயக்கமாக விழுந்துவிட்டாராம். இதுதான் காரணம். ஒன்றும் புரியாத வீட்டுப் பெண்கள் அழுதார்கள்; விக்கினார்கள்.

சில நிமிஷங்கள் இப்படிச் சென்றன. திடீரென்று அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த கண்ணன் எழுந்தான். ஓடினான். அறையைத் தாண்டி வெளியே வந்தான். மீண்டும் ஓடினான்.

—‘எங்கேடா கண்ணா ஓடுறே?’ —அந்த சமயத்தில் இப்படிக் கேட்டாள், அவன் பின்னாலேயே வந்த பாட்டி.

‘டாக்டர் வீட்டுக்குப் போறேன் பாட்டி’ என்று சொல்லிவிட்டு மீண்டும் ஓடத் தொடங்கினான் கண்ணன்.

‘ஐயோ போகாதேடா’—பாட்டி இப்படிக் கத்தினாள்.

கண்ணன் திடுக்கிட்டான். மயங்கிக் கிடக்கிறார் அப்பா—மருத்துவரை அழைக்கப் போகிறேன்—இதைப் பாட்டி தடுப்பானேன்?—இப்படி எண்ணினான். அவனுக்கு எதுவும் புரியவில்லை. ‘ஏன்பாட்டி? டாக்டரை அழைக்காமல் வேறு என்ன செய்வது?’—என்று கேட்டான்.

‘அழைக்கலாம்; ஆனால் இப்போது வேண்டாம்’

‘ஐயையோ! ஏன் பாட்டி அப்படி?’

‘மணியைப் பாரேன்; ஏழு ஆகிறது. இன்னும் அரை மணி கழித்துப் போகலாம்...’

‘ஏன்?’

‘ஏனா? இப்போ நல்ல உச்சி ராவுகாலம்டா! ராவுகாலத்திலே டாக்டர் வந்து, அவன் உயிருக்கே ஆபத்து வந்துடப் போகுதடா!’

பாட்டி அழ ஆரம்பித்துவிட்டாள். கண்ணனோ திடுக்கிட்டு விட்டான். இந்த இக்கட்டான நிலையில் இன்னும் அரை மணி பொறுப்பதா? அதற்குள் ஏதேனும் நடந்துவிட்டால்...? இப்படி எண்ணினான். பாட்டியின் சொல்லை மீறி டாக்டரை அழைக்கத்தான் வேண்டும் என்று எண்ணினான். ஆனால்... ஓட முயற்சித்த அவனை எட்டிப் பிடித்தாள் பாட்டி.

‘வேண்டாமடா, சொல்வதைக் கேள்! எனக்குத் தெரியாதா டாக்டரை அழைக்க... கொஞ்சம் பொறு...’ என்று சொல்லிக்கொண்டே கண்ணனை அழைத்துக்கொண்டு உள்ளே போனாள்.

கண்ணன் ஒவ்வொருசெகண்டையும் எண்ணி எண்ணி கழித்தான். ஆனாலும் அவன் நெஞ்சில் பயம் தோன்றிவிட்டது தாமதத்தால் தந்தைக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்துவிட்டால்... ஐயோ, இந்தப் பாட்டி இப்படிச் சொல்கிறார்களே, என்னசெய்வது? இப்படி முணமுணத்தான். சிந்தித்தான். திடீரென்று என்னவோ நினைத்தான். நினைத்தபடி செய்தும் விட்டான்.

★

நேரம் சென்றது.

கண்ணன் அவசரஅவசரமாக பாட்டியை அழைத்துவந்து கடிகாரத்தைக் காட்டினான். மணி ஏழரை! மறுகணம் பாட்டியின் உத்தரவுக்குக் காத்திராமல், டாக்டரின் வீட்டை நோக்கி ஓடினான்.

டாக்டர் வந்தார். அப்பாவின் உடலைப் பரிசோதித்தார் பெரிய வெடிகுண்டையும் தூக்கிப் போட்டார். ‘நல்லவேளை, சீக்கிரம் என்னிடம் வந்தீர்கள்! இன்னும் கொஞ்சம் தாமதமாகியிருந்தால், இவரின் உயிருக்கே பேராபத்தாகியிருக்கும்—பயங்கரமான இருதய பலவீனம் இது! நான் சரிசெய்து விடுகிறேன்’ என்றார். மருந்துகள் கொடுத்தார். அப்பா கண்ணை விழித்தார். மற்றவர்கள் கண்களும் விரிந்தன ஆனந்தத்தால். டாக்டர் நாளை வருவதாகச் சொல்லிச் சென்றார்.

பாட்டிக்கு ஒரே மகிழ்ச்சி! தன் பொக்கை வாயைத்திறந்தபடியே கண்ணனிடம் வந்தாள்.

● தொடர்ச்சி 10-ம் பக்கம்

சிறிய வயதிலே

ஆருடமல்ல; அயராத உழைப்பு!

அந்தப் பையனைப் பார்த்து எல்லோருமே ஆச்சரியப் பட்டார்கள். “நல்ல பிள்ளையப்பா!” என்று மூக்கில் விரலை வைத்தார்கள். காரணம், என்ன தெரியுமா? மற்ற தம்பிகளைப் போல் அவன் சிரிக்க மாட்டான்; ஓட மாட்டான்; ஆட மாட்டான்; விளையாடவும் மாட்டான்; ‘உம்’ மென்று இருப்பான்; எப்போதும் சிந்தித்தபடி உட்கார்ந்திருப்பான்; தவறினால் படித்தபடியே இருப்பான்.

அப்படி படிக்கும்போது, அவனை ஒரே ஒரு புத்தகம் மிகவும் கவர்ந்து விட்டது. வடதுருவத்தை அடைய அட்மிரல் பியரி என்பவர் செய்த முயற்சிகளின் தோல்விக் கதைதான் அது. அதைத் திருப்பித் திருப்பிப் படித்தான். அந்தப் பையன். அந்தப்புத்தகம் அவன் மனதில் பெரும் குழப்பத்தையே உண்டுபண்ணி விட்டது. அதன்பலன் என்ன தெரியுமா?

ஒருநாள் திடீரென்று கடைத்தெருவுக்கு ஓடினான். புதிதாக ஒரு ‘டைரி’யை வாங்கினான். வீட்டிற்கு ஓடிவந்தான். தனி இடத்தில் உட்கார்ந்தான். டைரியைப் பிரித்தான். அவசர அவசரமாக என்னவோ எழுதினான். எழுதியதை திருப்பித் திருப்பிப் படித்தான். தானாக சிரித்துக்கொண்டான். ஆனால் மறுகணமே சிந்திக்கவும் ஆரம்பித்து விட்டான்!

அப்படி அவன் எழுதியது தான் என்ன என்று அறிய ஆவல் உண்டாகிறதல்லவா? இதோ அவன் எழுதியது. “இன்று நான் ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டேன், வடதுருவத்தை அடையும் முதல் மனிதனாக நான்தான் இருக்க வேண்டும்; கண்டிப்பாக இருக்கவும் போகிறேன்” என்பதுதான்.

“பன்னிரண்டு வயதிலேயே இப்படி ஒரு பைத்திக்கார தீர்மானமா?” என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா? ஆனால், முடிவைக் கேட்டதும் ‘அப்படியா!’ என்று ஆச்சரியப் படுவீர்கள். ஏன் தெரியுமா? பிஞ்சுப் பருவத்திலேயே அப்படி ஒரு தீர்மானம் ஏற்ற அந்தப் பையன்தான்-பெரிய வயதில் வடதுருவத்தில் மட்டுமல்ல; தென் துருவத்தின் மேலேயும் பறந்த முதல் மனிதர்-புகழ் பெற்ற துணிகர வீரர்—ரிச்சர்ட் எவலின் பயர்ட் என்பவர்!

பெரிய மனிதர்கள்

வால் நட்சத்...

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

"ஆபாசப் புத்தகங்கள் என்று சோல்கிறீரே; அதைப் போல அரை டஜன் புத்தகங்கள் எழுதித்தாரும். 'இம்மிடியேட்டாக' ரூபாய் நோட்டுகளை அள்ளிக் கொடுக்கிறேன். இப்போதே 'அட்வான்ஸ்' வாங்கிக் கொள்கிறீரா?"— வெள்ளிப் பணங்கள் அவனுடைய முகத்திலே மின்னி மறைகின்றன.

ஒரே சிரிப்பு-பெருஞ் சிரிப்பு-பேய்ச் சிரிப்பு சிரிக்கிறான்.

இரைப்பைக்கும், இருதயப்பைக்கும் பயங்கரப் போராட்டம்! மூளையும் மனச்சாட்சியும் ஒரு பக்கம் நின்று கொண்டு அஸ்திரங்களை வாரி வீசுகிறது — எதிர்த்தாற் போல சிறுகுடலும், சூழ்நிலையும் மாபெரும் கேடயமொன்றால் தாக்க வரும் அம்புகளை தரையில் வீழ்த்தி மலை அசைவதைப் போல நகர்ந்து வருகிறது — அதோ, அருகே வந்து விட்டது, ஐயோ! நசுக்கியே விட்டது.

திடீரென்று புரட்சி வசியன் முகத்திலே ஒரு புத்தொளி! பக்கத்திலே இருக்கும் மேஜையின் மீது தாவிப்பாய்கிறான், பேனாவை எடுக்கிறான்—இயந்திரத்தைப் போல, காகிதத்திலே ஏதேதோ எழுதுகிறான்...

நண்பர்களே! இப்போது புரிகிறதா நான் ஏன் சிரித்தேன் என்பதின் ரகசியம்? இன்னும் புரியவில்லையா? இதோ விளக்கமாகவே சொல்லிவிடுகிறேன்.

புரட்சிவசியனுடைய வால்நட்சத்திரத்தைப் புகழ்ந்து, அவனுக்கு நினைவுச் சின்னமும் எழுப்ப வேண்டும்—என்று பேசும் போது ஸ்ரீமான் சிவநேசன், காரசாரமாகக் கண்டித்தாரே; சில ஆபாசப் புத்தகங்களைப்பற்றி; அவைகளின் ஆசிரியன் புரட்சிவசியன் தான்! 'இன்பப் பித்தன்' என்னும் புனைப் பெயரிலே; "நிக்கல் நாணயத்துக்கு நிர்வாண நங்கையர்"—"காசைப்போடு; கட்டிப்பிடி"... "வேசையரின் லீலா விநோதங்கள்"—போன்ற ஆபாசக் குப்பைகளை எழுதிக் குவித்தவன் வேறு யாருமல்ல; சிரஞ்சீவி இலக்கியமாம் 'வால் நட்சத்திரத்'தைப் படைத்த புரட்சிவசியன்தான்! அந்தப் புத்தகங்களை பிரசுரித்து அவனை ஊக்குவித்தவர் யார் தெரியுமா? ஜாலி பப்ளிகேஷன்ஸ் முதலாளி சண்முகானந்தம் தான்! தமிழ்த்தாயின் மீது மலத்தால் மாலை சூடியவன் ஒரு தறுதலையல்ல; அவளுக்குப் பொன்னுடையொன்று போர்த்திய புதல்வன் தான்!

ஆச்சரியமாயிருக்கிறதா? இருபதாம் நூற்றாண்டில் அப்படியெல்லால் ஆச்சரியப்படாதீர்கள். நான் புரட்சிவசியனோடு பல ஆண்டுகள் வாழ்ந்தவன், நான் சொல்வது அவ்வளவும் உண்மை; நம்புங்கள். இன்னுமா திகைக்கிறீர்கள்?

பெயரும் புகழும் சோறு போடுமா? மனைவி மக்களை வாழ வைத்து விடுமா? எனவேதான் புகழுக்குஒரு வால்நட்சத்திரத்தை எழுதினான் — பிழைப்புக்கோ தோன்றி மறையும் மின்மினிப் பூச்சிகளை உருவாக்கினான்.

பரிதாபத்திற்குரிய அந்த எழுத்தாளனுக்கு நீங்களெல்லாம் ஒரு சிறு உதவி செய்ய வேண்டும்—

தயவு செய்து அந்த ஆபாசப் புத்தகங்களின் ஆசானும், வால் நட்சத்திரத்தின் ஆசிரியனும் புரட்சிவசியன்தான் என்று யாரிடமும் சொல்லிவிடாதீர்கள். 'வால் நட்சத்திர'த்தால் வளர்ந்திருக்கும் அவன் புகழாவது நிலைத்திருக்கட்டும்!

— மாறன், பி ஏ. (ஹானர்ஸ்)

இலக்கியத்தில்......

● 1-ம் பக்கத் தொடர்ச்சி

செம்மண்ணிலே பெய்த நீரையும், சிகப்பு நிறத்தையும் எப்படி பிரிக்கமுடியாதோ, அதுபோலவே பிரிவு காணமல் ஒன்று சேர்ந்தோம்—என்று காதல் பாட்டிசைத்த புலவனின் பெயர் '**செம்புலப் பெயல் நீரார்**' என்றே வழங்குகிறதல்லவா? அதுபோன்றே; காக்கையின் பெருமை பாடிய இந்தப் பாடலும் புகழ்பெற்று, இதை இயற்றிய நச்செள்ளையின் பெயருக்கும் "காக்கைப் பாடினியார்" என்ற சொற்களே அடைமொழிகளாகிவிட்டது. 'காக்கை கத்துவதற்கும், வீட்டிற்கு புதியவர் வருவதற்கும் யாதொரு உறவுமில்லை; எல்லாம் மனச் சாந்திக்குத் தான்'—என்று 'நம்' கருத்து சொல்லி, மூட நம்பிக்கையை இடித்துக்கூறும், அத்தகைய, சிறப்பு வாய்ந்த **குறுந்தொகைப்** பாடல் இதுதான்:

பல் பயந்த நெய்யின் தோண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணல் வெஞ்சோறு
எழுசலத்து ஏந்தினும் சிறிது என் தோரு
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துதரக் கரைந்த காக்கையது பலியே.

(குறுந்தொகை — 210)

உலகம் எழுதிய......

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் ஒன்று மட்டும் உண்மை, நேருவுக்கும் டி. டி. கேயிக்கும் தனிப்பட்ட முறையிலே தகராறுகள் முற்றிவிட்டன! எனவேதான் இப்படி முடை நாற்றம் வீசுகிறது.

டில்லி அமைச்சுக் குழுவில் அங்சம் வகித்த ஒரே ஒரு தென்னாட்டு ஆசாமியும் விலகப் போகிறார், 'ஆமாம் சாமிகளை' மட்டும் வைத்துக் கொண்டு, தன்னுடைய யதேச்சாதிகாரப் போக்கை சுட்டிக்காட்டும் மந்திரிகளை யெல்லாம் நேருதுரை வீட்டுக் கனுப்பிக் கொண்டிருக்கிறார். விஜயலட்சுமி பண்டிட் கூட இவ்வளவு சீக்கிரம் உடைமாற்றிக் கொள்ள மாட்டார் போலிருகிறது—அவருடைய அண்ணனோ மாதம் ஒரு தடவை மந்திரிசபையை மாற்றிக் கொண்டிருக்கிறார்.

பிரான்சு நாட்டிலே நிமிஷத்துக்கொருதடவை அமைச்சுக்குழு மாறுகிறது; இங்கு நேருவின் மனம் மாறும்போதெல்லாம் மந்திரிசபை திருத்தி அமைக்கப்படுகிறது. வேடிக்கை! வேடிக்கை!

பாவம்: டில்லியிலிருந்து சென்ற கிழமை சென்னை வந்த டி. டி. கே. இனிமேல் இங்கேயே தங்கிவிடுவாராம். திரும்பவும் அவர் "சோப்" விற்கிறாரோ, அல்லது சென்னை செகரெட்டரியேட்டிற்குள்ளே நுழைகிறாரோ, இது இன்னும் யாருக்கும் சரிவரத்தெரியவில்லை.

ஆனால்ஒன்று; இந்த அய்யங்கார் வடக்கேயிருந்து வந்ததும் இன்னொரு அய்யங்கார் இந்த ஸ்தானத்தை நிறப்பப்போகிறாராம் ஆமாம்; சென்ற பொதுத்தேர்தலின் போது மாயவரம் தொகுதியிலே மண்ணைக்கவ்விய சந்தானம் அய்யங்கார் தன்னுடைய கவர்னர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு நேருவைச் சரணடையப் போகிறாராம்.

தேர்தலிலே தோற்றவர் மந்திரியாகப் போகிறார்; ஐயோ, ஜனநாயகமே, நீ இந்தியாவை விட்டு எங்கே போய் விட்டாய்!

★

பிறைவானம்...

○ 9-ம் பக்கத் தொடர்ச்சி

"பார்த்தியாடா! நீ ராகுகாலத்தில் போகத் துடிக்தாயே, அப்படிப் போயிருந்தால் கண்டிப்பாக ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்கும்... நல்லவேளை... அந்த ஆண்டவன்தான் என் பிள்ளையின் உயிரைக் காப்பாற்றினான்..." என்று சொன்னாள். பக்கத்திலிருந்த சாமியின் படத்தைப் பார்த்து கும்பிட்டாள்.

ஆனால் பாட்டிசொன்னதைக் கேட்ட கண்ணனோ சிரித்துக் கொண்டேநகர்ந்தான். கொஞ்ச தூரம் சென்றதும் வாய்விட்டுச் சிரித்தான். ஏன்?

"ஐயோபாவம்! நல்லபாட்டி நல்ல ராகுகாலம்! நான் நல்ல ராகுகாலத்தில் தான் டாக்டர் விட்டுக்குப் போனேன்-நல்ல ராகுகாலத்தில்தான் டாக்டரும் வந்தார்-மருந்தும் கொடுத்தார்-இது எங்கே பாட்டிக்குத் தெரியப் போகிறது? கடிகாரத்தின் முள்ளைத் திருப்பிவைத்து, அவளது கண்ணை மறைத்தேன்; என் அப்பாவும் பிழைத்தார்!..." என்பதுதான் அவனது சிரிப்பின் பொருள்!

— **சொர்ணம்**

கங்கை காணுதிருக்க..பிர்மாவின் கண்ணை மறைக்க...



...பள்ளியறையில் பாம்புகள் பயன்படும் விதம்!

கலைத் தோட்டம்.

நடிக நண்பர்களே! நினைவில் வையுங்கள்!

கூவும் குயிலிருக்க — புதுப் பண்ணமைத்து.. தரை நோக்கி தாவும் அருவியிருக்க — இசைப் போட்டியின் நீதிபதியாக கோட்டானையா தேர்ந்தெடுப்பது?

ஆடும் மயிலிருக்க-பஞ்சவர்ணம் காட்டும் வான வில் இருக்க— அழகை ரசிப்பதற்கு ஆந்தையையா தேர்ந்தெடுப்பார்கள்?

ஆமாம்; அப்படித்தான் செய்தார்கள்,

நாடகமே உலகம் என்பது போல, நடிகர்களின் ஒருமித்த உள்ளமாய்-அவர்களது வாழ்விலும், தாழ்விலும் பங்கேற்கும் தென்னிந்திய நடிகர் சங்கம் இருக்க; அவர்களின் பிரதிநித்வம் பெற்ற நாடகக்கழகம் இருக்க; டில்லியிலே நடைபெறும் தேசிய நாடக விழாவிற்கு தமிழகத்திலிருந்து நாடகமொன்றைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை சென்னை தியேட்டர் செண்ட்டரிடம் ஒப்புவித்தார்கள். அந்த தியேட்டர் செண்ட்டர் நாடகக் கலைஞர்கள் யாரையும் கலந்து ஆலோசிக்காமல்; தகுதி பெற்ற நடிகர்களின் ஒத்துழைப்பை கருத்தில் கொள்ளாமல், கல்கியாரின் ‘சிவகாமியின் சபத’த்தை வடக்கே அனுப்பியதையும்; அது குறித்து நடிக நண்பர்கள் பத்திரிகைகளிலே களம் அமைத்து போரடியகதையையும் நாடறியும். டில்லி சென்ற ‘சிவகாமி’ அங்கே மூக்கறுபட்டு திரும்பியதையும் நாமறிவோம்!

அந்தநேரம், ‘சுதந்தர பாரதத்தில் அரசாங்க ஆதரவுடன் நடைபெறும் முதல் நாடக விழாவில், அல்லும் பகலும் பாடுபட்டு கலை வளர்த்த எண்பதாண்டுக்கிழவர் சம்பந்த முதலியாருக்கு இடம் எங்கே? எப்.ஜி.நடேச அய்யர், கோபாலரத்னம் ஆகியோர் எங்கே?’— என்று சோகக் குரல் கொடுத்தார் கலைஞர் டி. கே. சண்முகம்.

“கிருபா அமெச்சூர்காரர்களே! வேண்டாம், இந்த விபீஷண வேலை. ‘அமெச்சூர்ஸ்’ என்றாலே ‘தொழிலுக்குப் புதியவர்கள்’ என்றுதான் பொருள், டில்லியிலே, நாடகத்தையே மூச்சாய் கொண்டு நாளெல்லாம் பாடுபடுவோர் பலர் வருவார்கள்; பசலைப் பருவம் முதற்கொண்டு, பவுடர் தடவிப் பழக்கப்பட்ட நடிகர்கள் பலர், வேறு மாகாணங்களிலிருந்து அங்கே நடிக்க வருவார்கள் —அவர்களிடையே தகுதி பெருத நீங்களும் போட்டிக்குப் போக வேண்டாம். தமிழகத்துக்கு இழிவுசேர்க்கவேண்டாம்’-என்று தென்னகத்தின் பெருமையிலே பங்குபெறும் நல்லவர் பலர் கேட்டுக்கொண்டார்கள். “தமிழகத்திலே எதற்கெடுத்தாலும் அபிப்பிராய பேதம்தான்!”-என்று சலிப்பான தொனியிலே, துரோக நாடகத்தை துவக்கி வைத்தார் நிதி அமைச்சர் சுப்ரமணியம். ‘வேறு கதியில்லையே!’ என்று மற்ற நண்பர்களும் அடங்கி விட்டார்கள்,

இத்தகைய பின்னணிகளைக் கொண்டுதான் ‘கல்கி’யாரின் நாடகம் மைலாப்பூர்க் காரர்களின் முயற்சியால், சுப்ரமணியத்தின் ஆசீர்வாதத்தோடு டில்லிக்குச் சென்றது. அங்கு, ‘சிவகாமி’ பெற்ற ‘செல்வாக்கை’ (?)ப்பற்றி ஜயாஅப்பாசாமி என்பவர் பிப்ரவரி 3-ந்தேதி ‘இந்து’ இதழில் எழுதியுள்ளார்; பாருங்கள்.

தென்னிந்தியப் பொதுமக்கள் தங்கள் ‘கலை’யை டில்லிக்கு அனுப்பும்போது மிகவும் அதிகமாகக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்...தேசிய நாடக விழாவின்போது, விமர்சகர்களால் மிகவும் மட்டமான நாடகம் என்று சொல்லப்பட்ட ஒரு நாடகத்தால் நாம் பிரதிநித்வம் செய்யப் பட்டோம்” கிருபா அமெச்சூர்ஸ் காரர்கள் வடக்கே ‘நமது’ பெருமையை எப்படி நிலை நாட்டியுள்ளார்கள், பார்த்தீர்களா ?

மட்டமான நாடகமாம்; டில்லி-நண்பர் ஜயா அப்பாசாமி, கிருபா அமெச்சூர்காரர்களால் நடத்திக் காட்டப்பட்ட, கல்கியாரின் சிவகாமியின் சபதத்தைத்தான் இப்படிக் குறிப்பிடுகிருர்! தமிழ் நாட்டின் பெருமையைச் சின்னபின்னமாக்க மைலாப்பூர் ‘கனபாடி’கள் தேசிய நாடக விழாவன்று, நாடகமென்னும் பெயரில் நடத்திய பொம்மலாட்டத்தைத்தான் இந்தப் பெயரிட்டு அழைக்கிருர்!

நடிக நண்பர்களே! இந்த கோரக் காட்சியைக் கண்டு, கண்களைப் புதைத்தோ, காதைப் பொத்தியோ பயனில்லை. ஜெயா அப்பாசாமியோடு நீங்களும் சேர்ந்து கொண்டு வெட்கப்படுங்கள்.

‘சுதந்தர பூமியாம் இது-அதிலே செல்லாக்காசாகி விட்டதே நமது உரிமை!’-என்று துக்கப்படுங்கள்!

✱

அழகான மூவர்ண முகப்பு!
50 வரலாற்ருசிரியர்களின் கருத்துக்களை மய்யமாகக் கொண்டது
கிரேக்க மாவீரன் - அலெக்ஸாண்டர்
தீட்டியவர்: **கௌதமன்** விலை ரூ. 2.
25 சதவீதம் கழிவு. முன்பணம் அனுப்பவேண்டும்.
தனிப்பிரதி தபால் செலவு இனும்.
சிந்தனையாளர் பதிப்பகம்,
68, அப்புமுதலித் தெரு, சென்னை-4.

கலைத் தூதன்

சூட்டும்-ஹேட்டும் அணிந்துகொண்டு அவர் உட்கார்ந்திருக்கிருர்—பக்கத்திலே, சூம்பிப்போய். சாறுபிழிந்த மாம்பழம்போல அந்தச் சிறுவன் நிற்கிருன்.

யார் இவர்கள் ?

ஆச்சரியப்படாதீர்கள்; அவர் ஒரு நடிகர்; ஹாலிவுட்டின் நகைச்சுவை சுரங்கம்; சிறு விழிகளால், குறுநகையால், களிநடனத்தால் உலகத்தையே சிரிப்பிலாழ்த்தும் டான்னி கே என்பவர்தான் அவர்!

அவர் அங்க அசைவுகளிலே கோணங்கியின் சேஷ்டைகள் இருக்கும்; அதே சமயம் கோணல் புத்திக்காரர்களின் குறைகளை எடுத்துரைப்பதாகவும் இருக்கும்!

அவர் பாடுவார்; ஆடுவார்—அதைப்பார்த்து தியேட்டரில் உட்கார்ந்திருப்பவர்களும் தலை அசைக்க-தாளம்போட ஆரம்பித்துவிடுவார்கள்!

கயல்விழி மாதரின் கூட்டத்திடையே ஒரு கொடும்புலி புகுந்துவிட்டால் எப்படி இருக்கும்? அதைப் போலத்தான்; டான்னி கேயின் படம் நடக்கிறதென்ருல் சினிமாக் கொட்டகையிலே ஒரே ஆரவாரம்! சிரிப்பொலி; கை தட்டல்—‘களேபாரமாக’ இருக்கும்!

படம் பார்த்து முடிந்சவுடன் நாம் மறந்துவிடும் நடிகரல்ல, டான்னி கே; நம் நெஞ்சிலேயே நிறைந்துவிடுவார்— அப்படி அமைந்திருக்கும், அவரது களங்கமில்லாத நடிப்பு!

சிரிக்கவைத்து, நம் சிந்தை கவரும் டான்னி கேயை, அவரது ‘விசிறி’களில் சிலர், உலகப் புகழ்பெற்று, நகைச்சுவையின் ‘எவரெஸ்ட்’டாக விளங்கும் சார்லி சாப்ளினுக்கு ஒப்பிடுகிருர்கள்—

அப்படிப்பட்டவர்தான், அனாதைச் சிறுவன் ஒருவனோடு இப்படிக் காட்சி தருகிருர். ஏன் இந்த நிலை ?—

ஐக்ய நாடுகள் சபை, பிற்போக்கு நாடுகளின் வாழ்க்கை உயர்வை கவனிப்பதற்காக குழந்தைகளின் அவசர உதவி நிதி யொன்றையும் துவக்கிவைத்திருக்கிறது. அந்த நிதி ஆசியாவிலுள்ள 14-நாடுகளுக்கும், உலகெங்கிலுமுள்ள 76-நாடுகளுக்கும் உதவி புரிந்து வருகிறது. இந்த எண்ணிக்கையில் ஐரோப்பிய நாடுகள் சேரவில்லை. காரணம், அவையெல்லாம் உதவிபெறும் நிலையில் இல்லாததுதான்!

குழந்தைகளின் நலன் நாடும் அந்த ‘நிதி’யின் அங்கீகாரம் பெற்ற தூதுவராகத்தான் சென்ற ஆண்டு டான்னி கே ஆசியாவுக்கு வருகை தந்தார். பச்சை சிசுக்களின் நல்வாழ்விலே அந்த நடிகருக்கு அவ்வளவு அக்கரை!

இவ்வாறு பொதுத் தொண்டிலே ஈடுபட்டிருப்பதால் ஹாலிவுட்டிலே அவரது தொழில் நிலை மந்தமாகி விடவில்லை; மாருக மலைபோல வளர்ந்திருக்கிறது!

முகத்திலே பவுடர் பூசிக்கொண்டு, கேமராவுக்கு முன்ஞல் உடல் அசைக்கும் இயந்திரமாகி விடவில்லை, டான்னி கே!

அவர் நடிகர்தான்—நானிலத்தோர் உயரவேண்டுமென்னும் நல்லாசையும் அவருக்கு இருக்கிறது!

கடைசிப்பக்கம்

ராமசாமி அய்யர்,

ரேங்கநாத அய்யர்; மாம்டலம்.

(?) முரசொலி பொங்கல் மலரைப் பிரித்தோம். திறந்தவுடனேயே அண்ணுதுரையின் கட்டுரை இருந்தது. உள்ளே எங்கும் ஒரே நாஸ்திகப் பிரச்சாரம். உடனே மலருக்கு தீ வைத்து விட்டோம்.

குண்டலகேசி — வளையாபதி மணி போன்ற காவியங்களை- பண்டைத் தமிழ் ஏடுகளை தீவைத்து சாம்பலாக்கி விட்டுத்தான் மகிழ்ந்தீர்களே: கொள்ளிவைக்கும் மனப்பான்மை இன்னுமா உங்களிடம் இருக்கிறது? அட, பைத்தியக்காரர்களா! இலவம் பஞ்சல்ல எங்கள் கொள்கை; தீப் பட்டவுடன் தீய்ந்து விடுவதற்கு! அது ஒரு இமயமலை என்பதை நினைவில் நிறுத்துங்கள்.

ஜெகந்நாதன்; பிரம்பை.

(?) ஆவடி மாநாட்டின்போது கதராடையுடனும், கதர்க்குல்லாயுடனும் காட்சி அளித்த நேரு, லண்டன் காமன்வெல்த் மாநாட்டின் போது ஆங்கில உடையிலே பவனி வருவதேன்?

இது தெரியாதா உமக்கு! மோதிலால் மைந்தர் ஒரு தேர்ந்தெடுத்த சந்தர்ப்பவாதி அதாவது இடத்திற்குத் தகுந்தாற்போல் தன்மையை மாற்றிக் கொள்வார் என்கிறேன்-சீனம் சென்று திரும்பினால் சோஷலிச கோஷம் போடுவார்; லண்டனுக்குப் போனால் ஏகாதிபத்ய வேஷம் போடுவார்!

தேவன்; எட்டையாபுரம்.

(?) தேன் துளிகளை அன்பளிப்பாக அனுப்பினால் ஏற்றுக் கோள்வீர்களா?

தேன் துளிகள் வேண்டாம். வாரம் இரண்டணு கொடுத்து ஒரு 'முரசொலி' வாங்கிப் படியுங்கள், அந்த அன்பளிப்பே எனக்குப் போதும்!

சித்சபேசன்; தேரிழந்தூர்.

(?) ஓய், எழுத்தாணியாரே! ஆரியர்கள் இந்த நாட்டிற்கு வந்த காலத்தை நீர் திட்டவட்டமாகக் கூறமுடியுமா?

ஏன் முடியாது? முன்பு அருந்திறல் முதகுமி என்னும் விரிந்த உள்ளம் கொண்ட பாண்டியனொருவன் இருந்தான். அவன் காலமாகிய கி. மு. 7500-ல் இருந்தேஆரியர்கள் திரளாக தமிழகம் நோக்கி வர ஆரம்பித்தார்கள். அவன் காலம் முதல் தான் ஒரு ஆரிய அகத்தியரை புரோகிதராக பாண்டிய மன்னர்கள் அமர்த்திக் கொண்டார்கள்!

உ. மு. சுலைமான்;

அம்மாபேட்டை

(?) மழையிலும், குளிரிலும் நனைந்து குடிசையிலே வாழும் தோழர்களை, நாளை திராவிட நாடு கிடைத்தவுடன் கோபுரத்திலே குடியேற்றுவீர்களா?

சுதந்திரம் கிடைத்தவுடன் தெருவிலே தேனும், பாலும்ஒடும்என்று தேசியத் தோழர்கள் கதையளந்தார்களே, அதைப்போல நானும் இப்போது பொய் சொல்லத் தயாராயில்லை. கோபுரத்திலே வாழாவிட்டாலும், இப்போது குடிசையிலே வதியும் நண்பர்கள் நாளை நன்ருக வாழும் நிலையிலிருப்பார்கள்-என்பதை மட்டும் என்னால் திண்ணமாகச் சொல்லமுடியும்!

அசு. அப்துல் ஹை;

அரகண்ட நல்லூர்.

(?) அறிஞன் எப்போது தோற்றுப் போகிருன்?

அறிவு மதிப்பிழக்கும் போது! உண்மை தோற்றுப் போகும் போது!

(?) வேதனையின் போது சிரிப்பவன் யார்?

சாணக்கிய உள்ளம் படைத்தோன்-வெளிவேஷக்காரன்; அவனை நம்பாதீர்கள்!

(?) உலகம் ஏன் இன்னும் இருண்டு போகவில்லை?

எங்கள் வீட்டுப் பூனை மட்டும் இன்னும் கண்களை மூடவில்லை; அதனால்தான்!

கேசவன்; பண்ருட்டி.

(?) பண்டைத் தமிழ் நூல்களெல்லாம் அழிந்து விட்டதாகக் கூறுகிருர்களே; இது எப்படி சாத்யம்?

காலப்போக்கிலே ஊழிகள் பல ஏற்பட்டன. தலையூழி கி. மு. 14058-லும், இடையூழி கி. மு. 9564-லும், கடையூழி கி. பி. 145-லும் ஏற்பட்டன. அப்போது தான் நம்முடைய கருவூலங்களில் பல அழிந்துவிட்டன.

எழிலரசன்; பிரம்பை.

(?) பொருளாதாரப் பிரச்னை சீரானால் சமுதாயம் தானுக முன்னேறி விடுமென்பது சரிதானு?

களஞ்சியத்தில் குவிந்து கிடக்கும் பணவிதைகளை தரிசு நிலத்திலே தூவிவிட்டால் விளைந்து விடுமா? நிலத்தை உழுது, நீர்பாய்ச்சி பண்படுத்த வேண்டாமா? அப்படிப் பண்படுத்தும் வேலையாகத்தான் சமுதாய சீர்திருத்தத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்கிறோம், நாம்!

சித. சுப்ரமணியன்;

மேலைச்சிவபுரி,

(?) 'ஆண்டவன் ஆகாசமதில் தூங்குகிருனே' என்பதை நீங்கள் ஒப்பியிருக்கிறீர்கள்; அப்படியானால் உங்கள் நாஸ்தீகக் கோள்கை தோற்றுப் போய் விடுகிறதே!

நாங்கள் என்றுமே எங்களை நாஸ்தீகர்கள் என்று பறைசாற்றிக் கொண்டதில்லை; 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்பதுதான் நாஸ்தீகமானால் நாங்கள் நாஸ்தீகர்கள் தான்.

ரத்னு, சென்னை-23

(?) சமீபத்தில் பட்டம் துறந்த பட்டம் தாணுப்பிள்ளை இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ஆச்சாரியார் தமிழில் எழுதிய 'சக்கரவர்த்தித் திருமகனை' அவர் மலையாளத்தில் மொழி பெயர்த்துக் கொண்டிருக்கலாம்!

பிள்ளப்பன்; முகவை.

(?) சட்டத்தை ஏன் கழுதைக்கு ஒப்பிடுகிருர்கள்?

இந்தக் காலத்தில் சட்டத்தின் தயவைநாடி கோர்ட்டுக்குப் போகிறவர்கள், கூடை கூடையாக ரூபாய் காகிதங்களை அந்தக் கழுதைக்கு உணவாகத் தரவேண்டியிருக்கிறதல்லவா! அதனால் தான்!

★

எங்கள் வெளியீடுகள்

முடிசாய்ந்தது (ஈ. வே. கி. சம்பத்) ... ரூ. 1—4—0

முரசோலினி (வி. சிவப்பிரகாசம் பி. ஏ.)... ரூ. 0-10—0

மற்ற நிலைய வெளியீடுகளும் கைவசம் உள்ளன

வியாபாரிகட்கு தக்க கழிவு உண்டு

'தென்றல்-திரை' — 'தனி அரசு'

சேலம் நகர விற்பனையாளர்கள்

விபரங்கட்கு:

நீலா நிலையம்

புத்தக வெளியீடு-விற்பனை

சேரி ரோட், சேலம்.

கொள்கை வளருது கோபுரம் போலே!

கோவை
19-2-55

பேசுபவர் :
அறிஞர் அண்ணு
(ஆண்டு விழா)

20-2 55
தி. மு. கழகப் பொதுககூட்ட[ம்]
பேசுபவர் :
அறிஞர் அண்ணு

சித்தலவாய்
19-2-55
பேசுபவர் :
என். வி. நடராசன்

ஒட்டன்சத்திரம்
25-2-55
பேசுபவர் :
என். வி. நடராசன்

கும்மிடிப்பூண்டி
26-2 55
பேசுவோர் :
என். வி. நடராசன்
காஞ்சி-கல்யாணசுந்தரம்

★

தி. மு. க. பொதுக்குழு உறுப்பினர்கட்கு

"20-2-55 கோவை நகரையடுத்துள்ள பேரூரில் நடைபெறும் பொதுக்குழுக் கூட்டத்திற்கு வரும் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு பேரூரிலேயே குளிக்க, தங்க வசதிகளும், 20-ந்தேதி காலை முதல் உணவு ஏற்பாடும் செய்யப் பட்டுள்ளன. 20-2-5 காலை 5-மணி முதல் கோவை ரயில் நிலையத்தில் உறுப்பினர்களை வரவேற்க தொண்டர்கள் நிறுத்தப்பட்டிருப்பார்கள்." என்று கோவை நகர் தி. மு. க. செயலாளர் தோழர் அ. பழனிச்சாமி அறிவிக்கிருர்.

[கோவை ரயில் நிலையத்திலிருந்து பேரூர் டவுன் பஸ் ரூட் நெ. 2, 9, 14]

வெளிவருகிறது 4-3-55-ல்

இடையே நிறுத்தப்பட்டிருந்த இன்பதிராவிடத்தின் இலட்சியஏடு

தி. மு. க. தமிழ் வார இதழ்

'மக்கள் மணி'

ஆசிரியர்: டி. பி. ஜெகந்நாதன்

தனி இதழ் விலை அணு 1

எங்கும் முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை. சுவரொட்டிகளுக்கு எழுதுக!

நிர்வாகி,
'மக்கள் மணி
66, அய்யப்பசெட்டித் தெரு,
மண்ணடி, சென்னை-1.

Edited, Printed and published by M. Karunanithi at Murasoli Press, 4/1-8, Mount Road, Madras-6.